செந்தமிழ்

தொகுதி 90 ஏப்ரல் - 96 பகுதி 4

திங்கள் இதழ்

ஆசிரியர் மா. தனுக்கோடிபாண்டியன், பி.ஏ.பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

பொறுப்பாசிரியர் : பேரறிஞர் நா. பாலுசாமி,
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்.டி., எம்.எட்.,

செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர் தமிழண்ணல்,
முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேரறிஞர் அ. தட்சிணாமூர்த்தி,
முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் பழநி. அரங்கசாமி,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்

பேரறிஞர் ம.ரா.போ. குருசாமி,
செந்தில், தாமுநகர், கோயம்புத்தூர்

பேரறிஞர் ச. மெய்யப்பன்,
முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

பேரறிஞர் சி. கதிர் மகாதேவன்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேரறிஞர் கு. துரைராசு,
முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

பேரறிஞர் அ.அ. மணவாளன்,
தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம்

பேரறிஞர் க.ப. அறவாணன்,
மத்திய பல்கலைக் கழகம், புதுவை.

பேரறிஞர் சூ. இன்னாசி,
கிறித்துவத் தமிழ்த் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்

பெரும்புலவர் இரா. இளங்குமரன்,
திருவள்ளுவர் தவச்சாலை, அல்லூர், திருச்சி

பேரறிஞர் சி.மொ. இராசேந்திரன்,
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை

பெரும்புலவர் நா. பொன்னப்பன்,
மதுரைக் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் திருமதி. பத்மா சீனிவாசன்,
ஆங்கிலப் பேராசிரியர், மதுரை காமராசர் பலகலைக் கழகம்

பேரறிஞர் நா.ந. மாணிக்கம்
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை

பேரறிஞர் திருமதி. சரசுவதி விசய வேணுகோபால்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

பேரறிஞர் எஸ்.எம். கமால்,
21, ஈசா பள்ளிவாசல் தெரு, இராமநாதபுரம்

பேரறிஞர் ஈ.கே. இராமசாமி,
தமிழ்ப் பேராசிரியர், யாதவர் கல்லூரி, மதுரை.

பொருளடக்கம்

		பக்கம்
1.	எல்லோர்க்கும் தொல்காப்பியம் பேரறிஞர் நா. பாலுசாமி	130
2.	அபிராமி அந்தாதி அ. தட்சிணாமூர்த்தி	139
3.	தமிழர்தம் ஆங்கிலச் சார்புவேரும் விழுதும் பேரறிஞர். க. முத்தையா	144
4.	திருக்கடைக் காப்பு பேரறிஞர் வா.கோ. கிருட்டிணமூர்த்தி	150
5.	கருவூர்த்தேவர் பேரறிஞர் வ. குருநாதன்	155
6.	ஒன்றாக நல்லது கொல்லாமை பேராசிரியர் க.சி. அகமுடைநம்பி	162
7.	தமிழிலக்கியத்தில் திருவாசகம் பேர்றிஞர். தி.நா. பிரண்தார்த்திஹரன்	168

இதழ்க் கட்டணம்

ஆண்டுக் கட்டணம் ரூ. 50.00

வாணாள் கட்டணம் ரூ.400.00

புரவலர்க் கட்டணம் ரூ. 1000

அயல்நாடு

ஆண்டுக் கட்டணம் ரூ. 125.00

வாணாள் கட்டணம் ரூ.600.00

எல்லோர்க்கும் தொல்காப்பியம்

– பேரறிஞர் நா. பாலுசாமி

(தொல் – சொல் – கிளவியாக்கம்)

(முன் இதழ்த் தொடர்ச்சி)

சூத்திரம் 41

**சிறப்புப் பெயரும் இயற்பெயரும்
சிறப்பின் ஆகிய பெயர்நிலைக் கிளவிக்கும்
இயற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்**

(ப.உரை) சிறப்பின் ஆகிய-யாதானும் ஒரு சிறப்புப் பற்றி வழங்கப் பட்ட. பெயர் நிலைக் கிளவிக்கும் - ஒருவரது பெயருக்கு முன், இயற்பெயர்க் கிளவி - இயல்பாக வழங்கி வரும் பெயரை, முற்பட - முன்னர் நிற்குமாறு, கிளவார் - கூறார் அறிஞர்.

ஒருவருக்குப் பெற்றோரால் இடப்பட்டு வழங்கி வரும் இயல்பான பெயரைக் கூறும்போது, அவருக்குச் சிறப்புப் பற்றி உலகினரால் வழங்கப்பட்ட பட்டப் பெயருக்கு முன்னர் வைத்துக் கூறமாட்டார்கள். அவ்வாறு கூறுவது மரபில்லை. சிறப்புப் பெயரை முற்கூறி இயற் பெயரைப் பிற் கூறல் வேண்டும்.

(வி-உரை) கிளவி - சொல் (பெயர்ச்சொல்) கிளவார் - கூறார் இயற்பெயர் - பெற்றோர் இட்டபெயர். சிறப்புப் பெயர் - ஒருவரது பெருமையைக் குறித்து அரசினாலோ பிற சங்கங்களினாலோ வழங்கப்படும். விருதுகள் அல்லது பட்டங்கள். காவிதி - முற்காலத்தில் மந்திரிக்கு வழங்கப் பட்ட சிறப்பு விருது. ஏனாதி - படைத்தலைவருக்கு வழங்கப்பட்ட விருது.

(எ-டு) காவிதி கண்ணன் வந்தான். இங்குக் காவிதி சிறப்புப் பெயர்; கண்ணன் இயற்பெயர். இயற்பெயருக்கு முன்னரே சிறப்புப் பெயர் வந்துள்ளமை காண்க. இவ்வாறே, ஏனாதி முருகன் வந்தான். இங்கு ஏனாதி

சிறப்புப் பெயர்; முருகன் இயற்பெயர். இவ்வாறு இயற்பெயர்களுக்கு முன்னர் சிறப்புப் பெயர்களைக் கூறல் வேண்டும். இவ்வாறு இல்லாமல், ஏனாதி வந்தான், முருகன் வந்தான் என்று கூறினால் ஏனாதி என்பவன் ஒருவனாகவும் முருகன் என்பவன் மற்றொருவனாகவும் கருதப்பட்டு இருவரும் வேறானவர்கள் எனக் கருதப்படுவார்கள். இது பொருந்தாமை அறிக. காவிதி கண்ணன் என்பதற்கும் இது பொருந்தும்.

சூத்திரம் - 42

ஒரே பொருள் குறித்த பல பெயர்கள்

ஒரு பொருள் குறித்த வேறு பெயர்க் கிளவி
தொழில் வேறு கிளப்பின் ஒன்றிடன் இலவே.

(ப-ரை) ஒரு பொருள் குறித்த-ஒரு பொருளைக் குறித்து வந்த, வேறு பெயர்க் கிளவி - பல்வேறு பெயர்கள், தொழில் வேறு கிளப்பின் - வெவ்வேறு செயல்களைக் கொடுத்து முடித்தால், ஒன்று இடன் இல - ஒரு பொருளாகப் பொருந்தமாட்டா.

ஒரு பொருளைக் குறிக்கும் பல வேறுபட்ட பெயர்கள், வெவ்வேறு வகையான செயல்ளைக் கொண்டு அல்லது வினைமுற்றுகளைக் கொண்டு முடியுமானால், அவை ஒரே பொருளாகக் கருதப் படமாட்டா.

(வி-ரை) கிளவி - பெயர், வேறுபெயர் - பல பெயர்கள். தொழில் - செயல் அல்லது வினை. ஒன்று இடன் - பொருந்தும் தன்மை. இல - இல்லையாம்.

(எ.டு) பேராசிரியர் கோவைகிழார் தமிழ்ச் செம்மல் வளவனார் வந்தார் என்னும் தொடரில் பேராசிரியர், கோவை கிழார், தமிழ்ச் செம்மல், வளவனார் என்னும் நான்கு பெயர்கள் உள்ளன. ஆயின், இந்நான்கும் ஒரு பொருளையே (ஒருவரையே) குறிப்பனவாகும். ஏனெனில் இந்நான்கும் வந்தார் என்னும் ஒரு வினை கொண்டு (தொழில்) முடிந்தன. இவ்வாறு இன்றி, பேராசிரியர்,

பேசினார், கோவைகிழார் எழுதினார், தமிழ்ச் செம்மல் சென்றார், வளவனார் படித்தார் என்று வெவ்வேறு தொழில்கள் செய்ததாக வரின், இந்நான்கு பெயர்களும் ஒருவரைக் குறிக்காமல் வெவ்வேறு மனிதர்களைக் குறித்து வந்தனவாகும். எனவே இத்தொடர் ஒன்று - மாறில்லை (பொருந்துமாறு) எனப்பட்டது. இங்கே தொழில் என்பது வாக்கியத்தை முடிக்கும் சொல் அல்லது வினைமுற்று என்று அறியவும்.

சூத்திரம் - 43

இடவழுவமைதி

தன்மைச் சொல்லே அஃறிணைக் கிளவி என்று
எண்ணுவழி மருங்கில் விரவுதல் வரையார்.

(ப-ரை) தன்மைச் சொல் - உயர்திணைத் தன்மைச் சொல்லும், அஃறிணைக் கிளவி - அஃறிணைச் சொல்லும், என்று - என்று, எண்ணுவழி மருங்கில் - எண்ணப்படும் இடத்தில், விரவுதல் - கலந்து வருதலை, வரையார் - நீக்கார் அறிஞர்

உயர் திணைப் பெயரும் அஃறிணைப் பெயரும் கலந்து வருமிடத்தில் அவையிரண்டும் உயர்திணைக் குரிய ஒரு வினை முற்றைக் கொண்டு முடியும்.

(வி-ரை) தன்மைச் சொல் - தன்னைக் குறித்து வரும் உயர்திணைச் சொல். விரவுதல் - இரண்டு திணைச் சொற்களும் கலந்து ஒரே வினைமுடிபு கொள்ளுதல். எண்ணுவழி - எண்ணும் போது. மருங்கு - இடம்.

(எ-டு) நானும் என் கிளியும் உண்போம். நானும் என் நாயும் வருவோம். இங்கு நான் - உயர்திணைத் தன்மைப் பெயர்; கிளி, நாய் - அஃறிணைப் படர்க்கைப் பெயர்கள். உயர் திணைக்கு உயர்திணை வினைமுற்றும், அஃறிணைக்கு அஃறிணை வினைமுற்றும் வருவதே இலக்கண நெறி. ஆனால் இரண்டும் கலந்து வரும் போது தன்மைப் பன்மை வினைமுற்று (உண்போம், வருவோம்) கொடுத்து முடித்தல் விலக்கப்படாது. இது வழுவமைதியாகக் கொள்ளப்படும்; வழு (குற்றம்) ஆகாது.

சூத்திரம் : 44

ஒருமைச் சொற்கள்

ஒருமை எண்ணின் பொதுப்பிரி பாற்சொல்
ஒருமைக்கு அல்லது எண்ணுமுறை நில்லாது

(ப-ரை) ஒருமை எண்ணின் - ஒன்று என்னும் ஒருமை எண்ணை உணர்த்திப், பொது பிரிபால் சொல்-பொதுவிலிருந்து பிரிந்து ஒருவன், ஒருத்தி எனப்பிரிந்து வரும் சொல், ஒருமைக்கு அல்லது -ஒருமையைக் குறிக்குமே அல்லாது, எண்ணுமுறை நில்லாது - இருமை, மும்மை என வழங்காது. உயர்திணையுள் ஒருவன் ஒருத்தி என்னும் சொற்கள் (பெயர்கள்) ஒருமை எண்ணைக் குறித்துத் தான் நிற்கும். இருவன், இருத்தி என ஒன்றுக்குமேற்பட்ட எண்களுடன் வாரா.

(வி-ரை) பொது - பொதுச்சொல்; அதாவது ஒருவன், ஒருத்தி ஆகிய இரண்டுக்கும் பொதுவான சொல். ஒருவர் என்பது ஒருவன் என்ற ஆண்மகனையும், ஒருத்தி என்ற பெண்மகளையும் சேர்த்துப் பொதுவாகக் குறிக்கும் சொல்லாம். ஒருவன் என்பதில் 'அன்' என்பது விகுதி. ஒருவர் என்பதில் 'அர்' பலர்பால் விகுதி. இச்சூத்திரத்தில் 'எண்ணுமுறை நில்லாது' என்பது விகுதிகளையே குறிக்கும். அதாவது 'அன்' 'இ' என்பன ஒன்றைக்குறித்தே வரும்; ஒன்றுக்குமேற்பட்ட எண்களைக் குறித்து வாரா என்பதாம். ஏனெனில், 'ஒரு' என்னும் பகுதி, ஒருவர், இருவர், மூவர் எனப் பலரைக் குறித்தும் வரும். எனவே, 'பொதுப் பால் பிரிசொல்' என்னும் தொடரில் 'பிரிசொல்' என்பது விகுதிகள் மட்டும் குறிப்பனவாம்.

(எ-டு) ஒருவன் - ஒருத்தி (ஆண்) (பெண்) } இவ்வாறு வரும்

இருவன் - இருத்தி எனப் பலரைக்குறித்து வராது. இச்சூத்திரம் பால்வழுமைதியாகும்.

சூத்திரம் 45

வியங்கோள்முற்று

வியங்கோள் எண்ணுப் பெயர் திணைவிரவு வரையார்

(ப-ரை) விளங்கோள் - வியங்கோள் வினைமுற்றுடன் தொடரும், எண்ணுப் பெயர் - எண்ணுப் பெயர்கள், திணை விரவு - இருதிணையும் கலந்து வருதலை, வரையார் - நீக்கார் அறிவுடையார்.

உயர்திணை அஃறிணைப் பெயர்கள் வியங்கோள் வினைமுற்றைக் கொண்டு முடியுமானால், கலந்து வருதல் கடியப்படாது; அமைக்கப்படும்.

(வி-ரை) வியன் + கோள் = வியங்கோள். வியங்கோள்வினைமுற்று இ, இயர், க என்ற எழுத்துக்களை இறுதியில் கொண்டு முடியும். (எ-டு, வாழி (இ), வாழியர் (இயர்), வாழ்க (க), இவ்வினைமுற்று வாழ்த்துதல், வைதல் ஆகிய பொருள்களில் வரும். வாழ்க, ஒழிக - வியங்கோள் வினைமுற்றுக்கள். **அவன்** வாழ்க, **அது** வாழ்க என்று உயர்திணையிலும் அஃறிணையிலும் வியங்கோள் வினை முற்று வரும். ஆகவே இருதிணைப் பெயர்களும் விரவி (கலந்து) வந்து வியங்கோள் வினைமுற்றுக் கொண்டு முடிதல் பொருத்தமுடையதே.

(எ-டு) ஆவும் ஆயனும் செல்க. இவ்வாக்கியத்தில் ஆ (பசு) அஃறிணை; ஆயன் (இடையன்) உயர்திணை. இவ்விருதிணைப் பெயர்களும் கலந்து வந்து செல்க என்னும் வியங்கோள்வினைமுற்றுக் கொண்டு முடிந்தமை காண்க.

சூத்திரம் - 46

பன்மைச் சொற்கள்

வேறுவினைப் பொதுச் சொல் ஒருவினை கிளவார்

(ப-ரை) வேறுவினை - வெவ்வேறு வினைகளையுடைய, பொதுச் சொல், பல பொருள்களுக்கும் பொதுவாகிய சொல்லை, ஒருவினை - ஒரு பொருளுக்குரிய சிறப்பு வினையால், கிளவார் - கூறார்.

வெவ்வேறு வினைமுற்றுக்களை ஏற்கத்தக்க பல பொருள்களுக்கும் பொதுவாகிய சொல்லை

ஒன்றினுக்கே உரிய சிறப்பு வினைமுற்றால் கூற-மாட்டார் அறிஞர்.

(வி-ரை) வினை- வினைச் சொல் (முற்று). பொதுச் சொல் பல வினைகளைக் கொள்ளத்தக்க பொதுவாகிய ஒரு சிறப்பு வினைமுற்று. கிளவார் - கூறார்.

(எ-டு) அடிசில் (உணவு), அணி (ஆபரணம்) - இவ்விரண்டும் பொதுச் சொற்கள். அடிசில் - அடப்பட்டதெல்லாம் (சமைக்கப்பட்டதெல்லாம்) அடிசில் என்ற பொதுச் சொல்லால் பெறப்படும்; அணி-அணியப்படுவதெல்லாம் அணியெனப்படும்.

அடிசில் என்பது உண்ணத்தக்கன, தின்னத்தக்கன, பருகத்தக்கன, நக்கத்தக்கன ஆகிய நால்வகை உணவுகளையும் குறிக்கும் பொதுச்சொல். எனவே, அடிசில் உண்டான் என்று சிறப்பு வினையால் கூறக்கூடாது. சோறு உண்டான், முறுக்குத்தின்றான், பால் பருகினான், தேன் நக்கினான் என வெவ்வேறு சிறப்பு வினைமுற்றுக்களைப் பயன்படுத்த வேண்டும். அடிசில் அயின்றார் - இதில் அயின்றார் என்பது நால்வகை உணவுகளுக்கும் உரிய பொதுவினை. இவ்வாறின்றி அடிசில் உண்டார் என்றோ, தின்றார், பருகினார், நக்கினார் என்றோ சிறப்பு வினைகளால் கூறல் கூடாது.

சூத்திரம் 47

எண்ணுங் காலும் அதுஅதன் மரபே

(ப-ரை) எண்ணும் காலும் - வெவ்வேறு வினைச் சொற்களால் உணர்த்தப்படும் பொருள்களைப் பிரித்து எண்ணுமிடத்தும், அது அதன் மரபே-(முன் கூறியபடி) அதன் அதன் பொதுச் சொல்லுக்குக் கூறிய இலக்கணமே ஆகும்.

வேறுபட்ட வினைமுற்றுகளுக்கு உரிய பொருள்களை எண்ணுமிடத்தும் அவ்வவற்கு உரிய சிறப்பு வினைகளால் கூறாது ஒரு பொது வினைமுற்றால் கூறல் வேண்டும்.

(வி-ரை) எண்ணுதல் - பொருள்களை எண்ணுதல். கால் - இடம் (ஏழாம்) வேற்றுமை உருபு இடப்பொருளில் வந்துள்ளது) மரபு - இயல்பு.

(எ-டு) சோறும் கறியும் அயின்றார், யாழும் குழலும் இயம்பினார் (இசைத்தார்). இந்த எடுத்துக் காட்டுகளில் அயின்றார், இயம்பினார் என்பன பொதுவினை முற்றுக்கள். சோறும் கறியும் உண்டார் என்று சிறப்பு வினையால் சொல்ல வேண்டும். யாழ் - இசைத்தார், குழல் - ஊதினார் என்று சொல்வதே முறை. ஆனால் இச்சூத்திரத்தின்படி இவ்வாறு பிரிந்து எண்ணிச் சிறப்பு வினை கூறாமல் பொதுவினை முற்றால் கூறல் வேண்டும் என்பதாம். இது மரபு வழுக்காத்தலாம்.

சூத்திரம் - 48

இரட்டைக் கிளவி இரட்டில் பிரிந்திசையா

(ப-ரை) இரட்டைக் கிளவி - இரட்டித்து வந்து பொருள் உணர்த்தும் சொற்கள், இரட்டில் - இரட்டித்துக் கூறுமிடத்து, பிரிந்து - தனித்தனியே பிரிந்து, இசையா - வழங்கமாட்டா.

இரட்டித்து வரும் சொற்கள் சேர்ந்து நின்றே பொருள்தரும்; பிரித்தால் பொருள் சிதையும்.

(வி-ரை) கிளவி - சொல். இரட்டில் - இரட்டையாகச் சேர்த்துக் கூறல் - பிரிந்து இசையா - பிரித்துப் பொருள் கொண்டால் பயனில்லையாம்.

(எ-டு) குடுகுடு, மொறுமொறு, குப்குப், மளமள, கலகல - இவை எல்லாம் இரட்டித்துவரும் சொற்கள். குடு-குடு என்று பிரித்தால் பொருள்படாது. இவற்றைச் சேர்த்தே சொல்ல வேண்டும். தீ குப்குப் என்று கிளம்பியது; கலகல எனச் சிரித்தான், குடுகுடு என நடந்தான் - இவ்வாறு சேர்த்துப் படித்தால் மட்டும் பொருள்தரும். இவ்வாறு வருபவை இரட்டைக் கிளவிகள் ஆகும். இதுவும் மரபு வழுக்காத்தலாம்.

சூத்திரம் - 49

பன்மை வழக்கு

ஒரு பெயர்ப் பொதுச்சொல் உள்பொருள் ஒழியத்
தெரிபுவேறு கிளத்தல் தலைமையும் பன்மையும்
உயர்திணை மருங்கிலும் அஃறிணை மருங்கிலும்

(ப-ரை) உயர்திணை மருங்கிலும் - உயர்திணை இடத்தும், அஃறிணை மருங்கிலும் - அஃறிணை இடத்தும், ஒரு பெயர் பொது சொல் - ஒரு பெயரிட்டுக் கூறும் பல பொருள்களுக்குப் பொதுவாகிய சொல்லை, உள் பொருள் ஒழிய - மற்றைய உள்பொருள்கள் நீங்க, தலைமையும் பன்மையும் - தலைமை பற்றியோ பன்மை பற்றியோ, தெரிபு - தெரிந்து கொண்டு, வேறு கிளத்தல் - (ஒரு பெயரால்) வேறுபடுத்திக் கூறுக.

உயர்திணையிலோ அஃறிணையிலோ பலபொருள் களுக்கும் பொதுவாகிய ஒரு சொல்லை, அதனுள் அடங்கிய மற்றைய பொருள்கள் நீங்க, தலைமை பற்றி யோ பன்மை பற்றியோ வேறுபடுத்தி ஒரே பெயரால் கூறுக என்பதாம்.

(வி-ரை) பொதுச் சொல் - பல பொருள்களையும் உள்ளடக்கிக் கூறப்படும் ஒரு பொதுவான சொல். நாடு, தோப்பு, சேரி முதலியன இவ்வாறு வரும். பொதுச் சொற்களாம். நாட்டில் வாழும் பல்வேறு இனங்களும், தோப்பில் உள்ள பல்வேறு மரங்களும், சேரியில் வாழும் பல்வேறு சாதிகளும் அப்பொதுவில் அடங்கிய 'உள்பொருள்கள்' ஆகும். உள்பொருள் - அடங்கிய பொருள்கள். கிளத்தல் - கூறுக; வினைமுற்று. தெரிபு - தெரிந்து.

(எ-டு) பார்ப்பனச் சேரி என்னும் போது பார்ப்பனர் அல்லா தாரும் வாழ்ந்தாலும் தலைமை பற்றி உயர்திணையில் பார்ப்பனச் சேரி என்ற சிறப்புச் சொல்லால் (ஒரு பெயர்ப் பொதுச் சொல்) கூறுதல்; மறவர் நாடு என்னும் போது பிற சாதியினரும் வாழ்ந்தாலும் பன்மைப்பற்றி மறவர் நாடு என்னும் சிறப்புச் சொல்லால் கூறுதல். இராச வீதி என்னும் போது பிறரும் அவ்வீதியில் செல்லலாம் எனினும் தலைமை பற்றி இராச வீதி எனப் பட்டது. இவ்வாறே கமுகம் தோப்பு, வாழைத் தோட்டம் என்னும் போது பிற மரங்களும் சில இருந்தாலும் தலைமை பற்றியும் பன்மை பற்றியும் அஃறிணையில் ஒரு பொதுப் பெயரால் (சிறப்புச் சொல்) வழங்கப் படுகின்றன இச்சூத்திரம் மரபு வழாநிலை (மரபைக் காத்தல்) பற்றியதாகும்.

பெயரினும் தொழிலினும் பிரிபவை எல்லாம்

மயங்கல் கூடா வழக்குவழிப் பட்டன.

(ப-ரை) பெயரினும் தொழிலினும் - (உயர் திணையிலும் அஃறிணையிலும்) பெயராலும் வினையாலும், பிரிபவை எல்லாம் - பொதுமையிலிருந்து பிரிந்து (ஆணுக்கும் பெண்ணுக்கும்) உரியனவாக வருபவை எல்லாம், மயங்கல் கூடா - மயங்கா (குற்றமாகா), வழக்கு வழிப்பட்டன - மக்கள் வழங்கி வருவனவாம்.

உயர் திணையிலும் அஃறிணையிலும் ஆண் மகனுக்கும் பெண் மகளுக்கும் பொதுவாக உள்ள சில பெயர்ச் சொற்களும் தொழில் குறிக்கும் வினைச் சொற்களும், பிற சொற்களின் உதவியின்றி, ஒரு பாலுக்கே (ஆண் அல்லது பெண்) உரியவாய் வருதல் உண்டு.

(வி-ரை) பெயர் - பெயர்ச்சொல்; வினைச்சொல். மயங்கல் - குற்றம்; கூடா - ஆகா (பன்மை வினைமுற்று). பெயர்ச் சொற்களும் வினைச் சொற்களும் ஆகிய **சொற்கள்** என்பது எழுவாய். வழக்கு - உலக வழக்கு.

(எ-டு) தொடி, கழல், வளையல், சிலம்பு - இவற்றில் தொடியும் வளையலும் சிலம்பும் மகளிர் அணிவன; கழல் ஆடவர் அணிவது. குழந்தைப் பருவத்தில் ஆண் பெண் வேறு பாடு பாராமல் சிலம்பை இருபாலார்க்கும் அணியும் மரபும் உண்டு. இங்கு இதுபொதுச் சொல். மணந்தார் - இச்சொல் திருமணம் செய்தார் என்னும பொருளில் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாக வழங்கும் சொல். ஆனால், இவர் வாழ்க்கைப்பட்டார் என்னும் தொடரில் வாழ்க்கைப்படுதல் மகளிர்க்கே உரிய தொழில். இவ்வாறு சில பொதுச் சொற்கள் ஒரு பாலுக்கே உரியனவாக வருதல் குற்றமாகாது என்பது இச்சூத்திரத் தின் கருத்து.

(தொடரும்)

அபிராமி அந்தாதி
ABIRAMI ANTHATHI

அ. தட்சிணாமூர்த்தி

கொடியே யிளவஞ்சிக் கொம்பே யெனக்கு வம்பே பழுத்த
படியே மறையின் பரிமளமே பனிமா லிமயப்
பிடியே பிரமன் முதலாய தேவரைப் பெற்ற அம்மே
அடியேன் இறந்திங் கினிப்பிற வாமல்வந் தாண்டு கொள்ளே.

Oh liana-like Mother! tender Vanchi creeper !
Thy grace ripened for this humble soul,
Though not mature enough to receive it!
Thou art the fragrance of the holy texts!
Thou art the daughter of the Himalayas,
Lofty and cool! thou art the Mother
Of Lord Brahma and the other Celestials!
Pray condescend to enslave me
And retrive me from the endless chain of birth and death!
(22)

கொள்ளேன் மனத்தினின் கோலமல் லாதன்பர் கூட்டந் தன்னை
விள்ளேன் பரசமயம் விரும்பேன் வியன்மூவுலகுக்
குள்ளே யனைத்தினுக்கும் புறம்பே யுள்ளத் தேவிளைந்த
கள்ளே களிக்கும் களியே அளியவென் கண்மணியே!

Oh Abirami, Thou art within and without
All the things found in all the three worlds!
Thou art the elixir that secretes into mine heart!

Thou art the flood of ecstasy;
Thou art the merciful pupils of my eyes!
I contemplate nothing but Thy beauty!
I neither part from Thy devotees
Nor desire to take to other creeds! (23)

மணியே மணியின் ஒளியே யொளிரு மணிபுனைந்த
அணியே அணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே
பணியே னொருவரை நின்பத்ம பாதம் பணிந்த பின்னே

Thou art gem and its effulgence!
Thou art the ornament wrought with that gem!
Thou art the beauty of that ornament!
Thou art the disease for those
Who fail to worship Thy feet!
Thou art the medicine that cures that illness!
Thou art feast of the Celestial beings!
I will not worship another deity
After having worshipped Thy lotus feet! (24)

பின்னே திரிந்துன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்று கொண்டேன் முதன் மூவருக்கும்
அன்னே யுலகுக் கபிராமி யென்னு மருமருந்தே
என்னே யினியுன்னை யான்மற வாமனின் றேத்துவனே

Oh Mother of the Thirimurthies, the first among the Celestials!
Oh Precious nectar named Abirami!
Even in my former births. I performed tapas

To follow your servitors, worship them with devotion
And free myself from the chain of birth!
Hereafter. I'll ever remember and glorify Thee! (25)

ஏத்து மடியவ ரீரே ழுலகினை யும்படைத்தும்
காத்து மழித்துந் திரிபவ ராம்கமழ் பூங்கடம்பு
சாத்துங் குழலணங் கேமணம் நாறும்நின் தாளிணைக்கென்
நாத்தங்கு புன்மொழி யேறியவாறு நகையுடைத்தே!

Oh Abirami adorning Thy locks of hair
With the fragrant flowers of Kadambu!
The three great gods that create, sustain and destroy
All the fourteen fold world are Thy devotees!
So it is funny to think that ever
The unworthy words uttered
By me will reach Thy fragrant pair of feet! (26)

உடைத்தனை வஞ்சப் பிறவியை உள்ள முருகுமன்பு
படைத்தனை பத்மபதாம்புயம் சூடும் பணியெனக்கே
அடைத்தனை நெஞ்சத் தழுக்கை யெல்லா நின்ன ருட்புனலால்
துடைத்தனை சுந்தரி நின்னரு ளேதென்று சொல்லுவதே.

Oh Sundari! Thou have shattered to pieces my cruel chain of birth!
Thou blessed me with the heart - melting love!
Thou caused me wear Thy lotus feet on my head!
Thou cleansed every bit of stain in my heart
With the water - Thy grace!
How can one praise Thy grace? (27)

சொல்லும் பொருளும் மெனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க் கேயழியா வரசும்
செல்லும் தவநெறியும் சிவலோகமும் சித்திக்குமே.

Thou remain inseparable with Thy spouse,
The Cosmic dancer, very like the word
And its meaning! Oh liana,
Flowery and fragrant!
Thou invest Thy ardent devotees,
Who, day and night adorn
Thy sacred feet, with the lordship
Of the terrestrial world,
And the path of tapas, leading to salvation
And the bliss of attaining the abode of Lord Shiva!

(28)

சித்தியும் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும் பரா
சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும் தவம்முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியினுள்ளே புரக்கும் புரத்தையன்றே

Thiripura sundari is the eight great siddhies
And the one who bestows them!
She is the glowing Parasakthi
And also the shivam sustained by Shakthi!
She is moksha attained by the Yogins
And also the seed sown to attain it!

She is the emerging out buddhi
And the one who abides in the buddhi and protects all!
(29)

அன்றே தடுத்தென்னை ஆண்டுகொண்டாய் கொண்ட தல்லவென்கை
நன்றே உனக்கினி நானென் செயினும் நடுக் கடலுள்
சென்றே விழினும் கரையேற்றுகைநின் திருவுள்ளமே
ஒன்றே பலவுருவே யருவேயென் னுமையவளே!

Oh Abirami, Thou art in one form in many forms in no form.
Thou took me into Thy fold even at the moment of my birth.
Does it befit Thee if Thou deny it now?
Hereafter, it is Thy concern to retrive me
Whatever be my sins and even if I fall into the mid sea?
(30)

நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்
- புறம்

தமிழர்தம் ஆங்கிலச் சார்பு - வேரும் விழுதும்

- பேரறிஞர் க. முத்தையா

(முன் இதழ்த் தொடர்ச்சி)

பாரதியும், பிற மொழியினருக்குத் தங்கள் மொழி மீதுள்ள உண்மையான பற்றுதல், தமிழருக்குத் தமிழ்மொழி மீது இல்லை என்றும், தமிழன் தன்மொழிமீது பற்றுள்ளவனாக முழக்கமிடுவது எல்லாம் வெறும் பேச்சளவில்தான், செயல் அளவில் கடைபிடிப்பதில்லை என்றும், தமிழரின் உண்மையான உணர்வைப் படம் பிடித்துக் காட்டுகிறார் "தெலுங்கருக்குத் தெலுங்கு பாஷையில் பிறந்திருக்கும் உண்மையான அபிமானம் தமிழருக்குத் தமிழினிடம் இல்லை. தமிழிலிருந்து பூ மண்டலத்திலுள்ள பாஷைகள் எல்லாம் பிறந்து நிற்பதாகக் கூவின மாத்திரத்திலே ஒருவன் தமிழபிமானியாக மாட்டான். பள்ளிக் கூடத்துச் சாஸ்திரங்களெல்லாம் தமிழ்ப் பாஷையில் கற்றுக் கொடுக்கும் படிச் செய்கிறவனே தமிழபிமானி; தமிழராகக் கூடியிருக்கும் சபைகளிலேயும் தமிழராகப் பிறந்தோர் ஒருவருக்கொருவர் பேசும் போதும் இதர பாஷைகள் பேசாமல் தமிழே பேசும்படி முயற்சி செய்கிறவனே தமிழபிமானி" என்று தமிழ் வளர்ச்சி என்பது அதன் பயன்பாட்டு எல்லைகளின் விரிவாக்கத்தைப் பொறுத்தே அமையும் என்கிறார். ஐரோப்பியக் குடிகளாக நான்கே நான்கு பேருள்ள கும்பகோண நகரில் ஒரு பொதுக்கூட்டத்தில் நடவடிக்கைகள் முழுதும் ஆங்கிலத்தில் இல்லாமல் தமிழிலேயே இருந்தன. இந்நிகழ்ச்சி 'நியூ இந்தியா' பத்திரிகையில் தனிப்பட்ட ஒரு விறுவிறுப்புடைய செய்தியாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஒரு மொழிக் கூட்டத்தினர் தங்கள் மொழியில் பொதுக் கூட்டத்தை அமைத்தது பத்திரிகையில் விறுவிறுப்புடைய செய்தியாக வருமளவிற்கு அரிய நிகழ்வாக இருந்த காலம்தான் தமிழ் மறுமலர்ச்சிக் காலம்.

தமிழ் மறுமலர்ச்சிக் காலத்தில் சென்னையிலிருந்து வெளி வந்த நாளிதழ்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் அவைகளின் கருத்து வெளிப்பாட்டு மொழியில் தமிழ் பெரிதும் புறக்கணிக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. மெயில், எக்ஸ்பிரஸ், இந்து, நியூ இந்தியா, ஜஸ்டிஸ், ஸ்வராஜ்யா ஆகிய

ஆறு இதழ்கள் ஆங்கிலத்தில் வெளி வந்தன. இவற்றிற்கு எதிராகத் தமிழில் ஓரிரு இதழ்களே வெளி வந்தன. தமிழகப் பத்திரிகைகளின் வெளிப்பாட்டு மொழி குறித்து கில்பர்ட்டு சிலேட்டர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"ஐந்து நூறாயிரம் மக்களை உடைய நகரம் என்றல்ல, அதிக மக்கள் தொகையுடைய நகரங்களில் கூட உலகின் வேறு எந்தப் பகுதியிலாவது அயல்மொழியில் அதுவும் ஒரே அயல் மொழியில் ஆறு நாளிதழ்களை அச்சிட்டு நடத்தக் கூடிய ஒரு நகரம் இருக்க முடியுமா? இதே கேள்வியை இன்னொரு வகையாகக் கூடக் கேட்கலாம். தமக்கு ஆர்வமூட்டும் செய்திகளில் கூட ஒரு நாட்டு மக்கள் தங்கள் மொழிகளை விட்டுவிட்டு முன்னுரிமையுடன் வழங்கும் ஒரு மொழியை யாராவது அயல்மொழி என்று கருதமுடியுமா?" சிலேட்டரின் வினா பத்திரிகைத் துறையில் தமிழ் மொழியின் விலகலைத் தெளிவாகக் காட்டுகிறது.

ஆங்கில மொழியில் வெளிவரும் இதழ்களில் மட்டுமின்றித் தமிழுக்கென்றே தமிழ் மொழியில் வெளிவரும் இதழ்களின் மொழிநடை பற்றிய கருத்துக்கள் தமிழின் பின் தங்கிய நிலையைத் தெளிவுறுத்தும்.

தமிழ்ப் பத்திரிகைகளில் ஒவ்வொரு விஷயத்துக்கும் தமிழ் மகுடத்துக்கு மேல் இங்கிலீஷ் மகுடம் ஒன்று சூட்டியிருக்கிறது. 'ருஷியாவின் நிலைமை' **'The Situation of Russia'**, 'தாய்ப்பாஷையின் மூலமாகக் கல்வி பயிற்றல்' **'The Vernaculars as media of Instruction'**. ஆஹா நான் மாற்றி எழுதுகிறேன். தமிழை முதலாவது போட்டு இங்கிலீஷை பின்னே போட்டேன். அந்தப் பத்திரிகைகளில் அப்படி இல்லை. இங்கிலீஷை முன்னே போட்டுத் தமிழைக் கீழே போட்டிருக்கிறது. **'American Women'** 'அமெரிக்கா ஸ்திரீ' **'Our mathadhipatis'** 'நமது மடாதிபதிகள்' என்று எழுதியிருக்கிறது.

இவ்வாறு, இதழியல் துறையில் தமிழ் பின்னிலை அடைந்ததற்கு அவற்றின் உரிமையாளர்களும் ஆசிரியர்களும் மட்டுமின்றித் தமிழக வாசகர்களின் மனப்போக்கும் முக்கியக் காரணமாக அமைந்ததைப் பாரதி தன் கட்டுரை ஒன்றில் தெளிவாக்குகிறார். "உண்மையான கவிதைக்குத் தமிழ் நாட்டில் தக்க மதிப்பில்லை. இங்கிலீஷ் பாஷையிலிருந்து கதைகளை மொழி பெயர்த்துப் போட்டால், பலர் வாங்கி வாசிக்கிறார்கள்... தமிழில் உண்மையான இலக்கியத் திறமையும் தெய்வ அருளும்

பொருந்திய நூல்கள் எழுதுவோர் ஒரு சிலர் தோன்றியிருக்கிறார்கள். இவர்களுடைய தொழிலை அச்சடிப்பாரில்லை. காலம் சென்ற ராஜமையர் புதிதாகத் தமிழ்க் கதை எழுதுவதில் உண்மையான திறமை காட்டியிருக்கிறார் அவருக்குத் தகுந்த ஸம்மானமில்லை. ஆகவே, அந்தத் திறமையை மென்மேலும் வளர்த்துக் கொண்டு போக இடமில்லாமல் ஆரம்பத்திலேயே கைவிட்டு இங்கிலீஷ் மாதப் பத்திரிக்கை நடத்தப் போய்விட்டார். இவ்வாறாகத் தமிழின் புறக்கணிப்பிற்குத் தமிழ் வாசகர்களின் ஆங்கில மோகம் காரணமாக இருந்துள்ளது.

கல்வித் துறையிலும் ஆசிரியர், மாணவர்கள் தமிழை விடுத்து ஆங்கிலமொழியின் மீது அளவற்ற விருப்புக் கொண்டிருந்தனர். கல்வி நிறுவனங்களும் தமிழைப் புறக்கணித்து ஆங்கில மொழிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தன. 1916 ஏப்பிரல் 3-ந்தேதி 'மாடன் ரெவ்யூ' என்ற வங்கப் பத்திரிகையில் வெளியான செய்தி குறித்துப் பாரதி, "கலாசாலையில் சரித்திரப் பாடங்களை இங்கிலீஷில் கற்றுக் கொடுப்பதுபயனில்லாத வீண் தொல்லையாக முடிகிறது என்றும், தேச பாஷையிலே கற்றுக் கொடுத்தால் நல்ல பயன் விளையுமென்றும் ஸ்ரீ சர்க்கார் தமது அனுபவத்திலே கண்ட செய்தியைச் சொன்னார். அதற்கு நமது திருநெல்வேலிப் பண்டிதர் சொல்கிறார், 'பாஷைத் தொல்லை பெரும் தொல்லையாகவே இருக்கிறது. ஆனால், எனது ஜில்லா, எனது காலேஜ் சம்பந்தப்பட்டவரையிலே பிள்ளைகளுக்குச் சரித்திரப்பாடம் இங்கிலீஷிலே கற்றுக் கொடுப்பதைக் காட்டிலும் தேச பாஷையில் கற்றுக் கொடுப்பது அதிகமாகப் பயன்படும் என்று சொல்வதற்கில்லை. எனது மாணாக்கர்களிலே பெரும்பாலோர் இங்கிலீஷ் இலக்கணப் பிழைகளும், வழக்குப் பிழைகளும் நிறையச் செய்த போதிலும் மொத்தத்திலே தமிழைக் காட்டிலும் இங்கிலீஷை நன்றாக எழுதுகிறார்கள். சரித்திர விஷயங்களை வியவஹரிக்கும் போது எனக்கும் இங்கிலீஷ்தான் தமிழைக் காட்டிலும் நன்றாகச் சொல்ல வருகிறது' என்று தறிப்பிட்டதைச் சுட்டிக் காட்டுகிறார்.

மாணவர்களைப் பொறுத்தமட்டில் தமிழ் தேவையில்லாத ஒரு பாடமாகக் கருதப்பட்டது. "நம் பாடசாலைகளிலே கல்வி பயிலும் மாணாக்கர்களைப் பற்றிப் பேசுவதற்கே அவமானமாக இருக்கிறது. இந்த வாலிபர்கள் எந்த விதமான ஆண்மையும் இல்லாமல், குமாஸ்தா வேலைக்குத் தகுதியும் அறிவிழந்த ராஜபக்தியும், வெள்ளைக்காரர்களிடம் பயமும், சுதேச சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் வெறுப்பும்,

தாய்பாஷையிலே மஹா சூன்யமான பயிற்சியும் உடையவர்களாய், தமிழ் தெரியாது என்று சொல்வதும் கண்ணிலே வெள்ளெழுத்து விழுந்து விட்டது என்று சொல்வதுமே நாகரிகமெனப் பாராட்டும் இந்தப் பிள்ளைகளினாலா பாரதநாடு பிழைக்கப் போகிறது". என்று வருத்தப்படுமளவிற்குத் தமிழ் மாணவர்களின் நிலை இருந்துள்ளது.

தமிழின் பின்னடைவிற்கும் புறக்கணிப்பிற்கும் படித்த அதிலும் குறிப்பாக ஆங்கிலம் கற்ற வகுப்பினரே முழுக் காரணம் என்பதைப் பாரதி பின்வருமாறு கடிந்துரைக்கின்றார். "தமிழ் மட்டும் தெரிந்த ஜனங்களில் சிறுபாலர் தமிழ் விஷயத்தில் ஒருவிதமான மூடபக்தியாவது வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஆங்கிலம் கற்றவர்கள் இவ்விஷயத்தில் தமது கடமையை முற்றும் மறந்து விடுகிறார்கள் இவர்கள் தமிழ்ப் பாஷை விஷயத்தில் கொண்டிருக்கும் எண்ணத்தையும் இவர்கள் வகிக்கும் அசிரத்தையையும் டாக்டர் போப்பைப் போன்ற ஆங்கிலேயர்கள் அறியும் பட்சத்தில் இவர்கள் இருக்கும் திசையை நோக்கிக் காறியுமிழும் வண்ணமாக நம்மவர்கள் நடந்து கொள்ளுகிறார்கள்".

மறுமலர்ச்சிக்கு முந்தைய நிலை :

இவ்வாறாகத் தமிழ் மறுமலர்ச்சிக் காலத் தமிழின் பின்னடைவிற்கும், மறுமலர்ச்சி இயக்கத்தாரின் ஆங்கிலப் பற்றுதலுக்கும் காரணம் என்னவாக இருக்கும்? இதற்கு இவ்வியக்கங்கள் தோன்றுவதற்கு முன்னர் இருந்த ஆங்கில மொழி மீதான எண்ணங்களைத் தொடர்புறுத்திப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

தமிழகத்தைப் பொருத்தவரையில் நவீனக் கல்வி ஆங்கிலேயரின் தொடர்பினாலும், அறிவியல் கருத்துகள் ஆங்கிலத்தின் தொடர்பினாலும் தமிழருக்கும் தமிழுக்கும் அறிமுகமானதை மயிலை சீனி வேங்கடசாமி நாட்டார் பின்வருமாறு விளக்குகிறார். "ஐரோப்பியரின் தொடர்பு உண்டான பிறகு பாதிரிமார்கள் பாடசாலைகளை அமைத்து நமது நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கு ஐரோப்பிய வழக்கத்தைப் பின்பற்றிப் பாடங்களைப் போதிக்க முற்பட்ட பொழுது, எழுதுதல், படித்தல், கணக்குப் போடுதல் என்ற மூன்றுடன் மட்டும் நில்லாமல் பூகோள நூல், வானநூல், இயற்கைப் பொருள் க்ஷேத்திரக் கணிதம், தேச சரித்திரம் முதலிய விஞ்ஞான நூல்களைப்

போதிக்கத் தொங்கியபடியால் தமிழில் இந்நூல்கள் எழுதப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது முதலில் பாதிரிமாரும், மிசனரிமாரும் பின்னர் அரசாங்கத்தாரும் விஞ்ஞான நூல்களைத் தமிழில் எழுதி அச்சிட்டும் பிறரை எழுதத் தூண்டியும் இச் செய்கையில் பேருதவி புரிந்தனர்''

இவ்வாறு ஏற்பட்ட ஆங்கிலக் கல்வியின் உந்துதலினால் தமிழ் மொழியை வளர்க்க வேண்டுமெனில் ஆங்கிலத்தின் அரவணைப்பைப் பெற்றே ஆக வேண்டும் என்ற கோணத்தில் வேத நாயகம் பிள்ளை, சுந்தரம பிள்ளை, பரிதிமாற் கலைஞர், வெள்ளக்கால் சுப்பிரமணிய முதலியார், பூண்டி அரங்கநாத முதலியார் போன்றோர் செயல்பட்டனர்.

''ஆங்கிலம் பிரஞ்சு முதலிய அரசாங்க மொழிகளில் சன்மார்க்கங்களைப் பற்றியும், உலகத்திற்கு மிகவும் உபயோகமான பலவிஷயங்களைப் பற்றியும் அனேக கிரந்தங்கள் இருக்கிற படியால் அவைகளைப் படிக்கப் படிக்க அறிவு விசாலிக்கும். இம்மொழிகளைப் போல் தமிழ் இல்லாதிருப்பது பெருங்குறை என்பதை நாம் ஒப்புக் கொள்ளுகிறோம். அந்தக் குறையைப் பரிகரிப்பதற்குத்தான் எல்லோரும் ராசமொழிகளும் தமிழும் கலந்து படிக்க வேண்டுமென்று விரும்புகின்றோம்'' என்ற வேதநாயகம் பிள்ளையின் கூற்று தமிழ் ஆங்கிலம் இவையிரண்டின் ஒருங்கிணைப்பில் தமிழ் வளர்ச்சி பற்றிய எண்ணப் போக்கு இருந்ததைக் காட்டுகிறது. தமிழக மறுமலர்ச்சி சிந்தனையாளர்களின் ஆங்கில விருப்புக்கு முன்னோர்களின் மேற்குறித்த கருத்துக்கள் காரணமாகக் கூடும். ஆங்கிலத்தின் அரவணைப்பினால் தமிழை வளர்க்க முனைந்த தொடக்க காலச் சிந்தனையாளர்களின் எண்ணப் போக்குத்தான் பின்னவர்களின் ஆங்கிலப் பற்றுதலுக்கு முன்னோடியாக இருந்துள்ளது.

தமிழ்மொழி பற்றிய தொடக்க கால இப்போக்குகளினால் தான் இந்தியமொழிச் சிக்கலைப் பொறுத்த வரையில் தமிழர்களின் அணுகுமுறை ஆங்கிலத்தை ஒட்டியதாக அமைவதை நடப்பியல் செய்திகள் உறுதி செய்கின்றன. தமிழர்களின் இந்தி எதிர்ப்பு அணுகுமுறையை உன்னிப்பாகக் கவனிக்கும் போது, இந்திக்குச் சமமாகத் தமிழ் என்பதை விட, ஆங்கிலத்திற்குப் பதிலாகத் தமிழ் என்பதை விட இந்திக்குச் சமமாக ஆங்கிலம் என்ற கோரிக்கையில் தான் தமிழர்கள் தீவிர முனைப்புக் காட்டி வருகின்றனர். இந்தி மொழி ஏற்பையும் எதிர்ப்பையும் விட, தமிழ் வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்தைவிட, ஆங்கிலத்தின்

இருப்பிலும் தொடர்ச்சியான நீட்டிப்பிலும் தான் தமிழகத்தாரின் எண்ணம் சென்று கொண்டிருக்கிறது. ஆங்கிலத்தை ஆதரிப்பதனால் இந்தியைத் தவிர்க்கலாம், ஆனால் தமிழை வளர்க்க முடியுமா? இந்தியை எதிர்ப்பதாலும் ஆங்கிலத்தை ஆதரிப்பதாலும் தமிழ் வளர்ந்து விடுமா? இத்தகைய ஆங்கில அரவணைப்பிற்கான ஊற்றுக்கண் தமிழின் மறுமலர்ச்சிக் காலத்திற்கு முன்பாகவே உள்ளது.

ஈயென யிரத்தல் இழிந்தன்று அதனெதிர்

ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று

கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர்

கொள்ளே னென்றல் அதனினும் உயர்ந்தன்று

- புறம்

திருக்கடைக் காப்பு

- பேரறிஞர் வா.கோ.கிருட்டிணமூர்த்தி

(முன் இதழ்த் தொடர்ச்சி)

இவ்விளக்கங்களினால் பதிகத்தின் இறுதிப்பாடலில் அல்லது ஏதாவது ஒரு பாடலில் உள்ள வரி கூறி அல்லது அப்பாடலில் பொருந்திய கருத்தோடு பொருந்தும் மற்ற கருத்துக்களைக் கற்பனையாகப் புனைந்து பாடலாகச் சேர்த்து அதன் மீது திருக்கடைக்காப்பு சாத்தப்படும் எனக் கூறியுள்ளதறிக.

திருக்கடைக்காப்பு என்பது எப்பாடலில் எவ்வரி கூறி சாத்தப்பட்டது என்பது இதுவரை விளக்கப்பட்டது. இனி அத்திருக்கடைக்காப்பு எதனைக் கொண்டு சாத்தப்பட்டது என்பது காண்போம்.

தேவாரப் பதிகங்களிலும், பெரியபுராணப் பாடல்களிலும் பண், இசை, பண்ணிசை என்ற சொற்கள் அதிகமாகப் பயின்று வருகின்றன. அவற்றுள் பண் எனும் சொல்லின் பொருளை அறிவது திருக்கடைக்காப்பு எதனைக் கொண்டு சாத்தப்பட்டது என்பதன் விளக்கத்தை அறிவதற்கு இன்றியமையாததாகும்.

"பண்ணிப்படுத்தமையான் பண்" எனக் கூறப்பட்டுள்ளது. இசையில் பண்ணிப்படுத்தவை யாவை எனச் சுருக்கமாகக் காண்போம்

நாதம் எனும் இன்னொலிக் கூறுகள் இணைந்து இயற்கையான இசையாகின்றது. எவ்வின்னொலிக் கூறுகள் இணைகின்றனவோ அவற்றைப் பொறுத்து இசையின் சுவையும் அழகும் வேறுபடும். இன்னிசை எவ்வாறு உருவாயிற்று என்பதை விளக்க இந்நாதத்தை அளவுபடுத்த சுரங்களாகவும், இருசுரங்களுக் கிடையே உள்ள ஒலிகள், இரு சுரங்கள் அல்லது அவற்றிடை உள்ள ஒலிகள் இணையும் போது ஏற்படும் ஒலிகள் ஆகியவற்றை அளவு படுத்தப்படாத, அளவுபடுத்த முடியாத, எண்ணிலடங்காத, சுருதிகளாகவும் வைக்கப்பட்டன. சுரங்கள், சுருதிகள் என்பன விளக்கங்கருதி கூறப்பட்ட ஒலி, ஒலித்தன்மை இவை குறிக்கும் சொற்களாகும். இவ்வாறு சுருதிகளை எழுப்பவல்ல சுரங்கள் வெவ்வேறாக வரிசைப்படுத்தப்பட்டுப் பாலைகளாகக் கொள்ளப்பட்டு அப்பாலைகளின் வரிசையில் சுரங்களோ

சுருதிகளோ இணையும் போது ஏற்படும் ஒலிக் கோவையின் மொத்த உரு பண் எனக் கூறப்பட்டது.

மற்றொரு முறையில் சுரங்களின் ஒலி உறவு முறைகளை விளக்கி யாழ் என்றும், யாழின் கிளைச் சுரத்தைத் திறன் என்றும் (இயக்க சக்தி) அத்திறனின் இயங்கு முறையைத் திறம் என்றும் விளக்கி யாழ் குறிக்கும் ஐந்து பாலைகள் ஒவ்வொன்றையும் (பாலையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ், நெய்தல் யாழ், விளரி யாழ் ஆகிய பண்ணை ஏற்படுத்தக்கூடிய சுரவரிசைகள்) அகம், அருகு, புறம், பெருகு எனும் நான்கு சாதி நிரல்களாக நிறுத்தி அவை யாழ்களின் 25 திறத்தின் (திறம்) பாற்பட்டியங்கக் கிடைப்பன நூறு பண்கள் என்றும் விளக்கப்பட்டன. மேலும் மூன்று பொதுப்பண்கள் தோன்றும் முறையினை விளக்கிப் பண்கள் 103 எனப்பட்டன.

இயற்கையாகத் தோன்றிய ஒலிக்கோவைகளை மனத்தோடு இசையும் வகையில் (பொருந்தும் வகையில், மனதால் அறியும் வகையில்) இசைப்பது இசையென்றும், அவ்விசைத்தன்மை எவ்வாறு, எதனால் ஏற்பட்டது என்பதை மனித முயற்சியால் ஆக்கப்பட்ட இசைக்கூறுகளின் அடிப்படையில் விளக்கிச் செய்ததெல்லாம் (அக்கூறுகளும் அதன் விளைவுகளும்) பண் (பண்ணிப்படுத்தது, பண்ணியதால் தோன்றியது/ விளங்கியது) எனவும் கூறப்பட்டது. பண் என்பது அவ்வியற்கையாய்த் தோன்றிய இசையையே பொதுவாகக் குறிப்பிடினும் மனித முயற்சியால் விளக்கப்பட்ட தன்மைகளும் கூறுகளும் (இலக்கணம்) வெளிப்பட்டுத் தெரியுமாறு அமைந்தது பண் என்க. அவ்வாறு பண்ணப்பட்ட செயல்களும் கூறுகளும் வெளித்தோன்றுமாறு இயற்கையான இசையை இசைப்பது பண்ணிசை என்க.

"பண் நிறைந்த" என்றதற்கு சுர அமைதி நிறைந்த எனத் திரு. சி.கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தம் திருத்தொண்டர் புராண உரையில் கூறிள்ளார் (பகுதி 4, பக். அஅ)

ஒரு பண் அல்லது நிறத்தில் அல்லது வெவ்வேறு பண்கள் அல்லது நிறங்களில் ஒரே சுரம் பல சுருதிகளில் ஒலிக்கும். சுரக்குறியீட்டெழுத்து ஒன்றேயாயினும் அதன் சுருதியளவுகள் (ஒலியளவுகளும் தன்மைகளும்) வேறுபட்டன என்பதை விளக்கிக் கூறுமாற்றான் சுரம் பாடுவது என்பது பல சுருதி எனப்பட்டது.

திருக்கடைக்காப்பு என்பது பல சுருதி எனப்பட்டதால்

திருக்கடைக்காப்பு சாத்துவது என்பது கற்பனை சுரம் பாடுவது ஆகும். இதனை உறுதிப்படுத்தும் சில சான்றுகள் சேக்கிழாரின் பாடல்களில் மேலும் கிடைக்கின்றன.

சேக்கிழாரின் கூற்றுப்படி, சீர்காழியில் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் மதங்கசூளாமணியாரும் திருஞானசம்பந்தரைச் சந்தித்தது முதல் ஞானசம்பந்தர் பாட, யாழ்ப்பாணர் யாழில் இசைக்க, அவ்விசையை இருவரும் சேர்ந்து பாடியுமுள்ளனர். ஆயின் "மாதர் மடப்பிடி" எடுத்துப்பாடி திருக்கடைக்காப்புச் சாத்தும் போது முன்போல் இசைக்க முயன்ற யாழ்ப்பாணருக்கு எண் பெருகும் அப்பதிகத்திசை (சுர எழுத்துக்களை விரித்து இசைத்த: எண் எழுத்துமாகும்) யாழ் நரம்பில் அடங்கிற்றில்லை. யாழ்நரம்பில் அடங்கிற்றில்லை எனச் சேக்கிழார் கூறினாரே தவிர திருநீலகண்டயாழ்ப்பாணரால் இசைக்க இயலவில்லை எனக்கூறாதது காண்க. திருக்கடைக்காப்பு சாத்தும் வரை பாடியதெல்லாம் யாழ்நரம்பில் அடங்கவும் திருக்கடைக்காப்பு சாத்தும்போது எண் பெருகும் அப்பதிகத்தின் இசை யாழ் நரம்பில் அடங்காத காரணம் ஆய்தற்குரியது. முன்பு இசையொலியை மட்டும் எழுத்துக்களாலாய சொற்களோடு சேர்த்து மிடற்றால் இசைக்க, அவ்வொலியினை யாழ்ப்பாணரால் தம் யாழில் எழுப்பி இசைக்க முடிந்தது. பின்னர், திருஞான சம்பந்தர் திருக்கடைக் காப்பாகிய பல சுருதியினை அச்சுருதி குறிப்பிடும் சுரக்குறியீட்டெழுத்தாகிய எண்ணுடன் (எழுத்துடன்) கூட்டி இசைக்காமல், ஒலியையும் அதன் குறியீட்டெழுத்தையும் முரித்துப் பாடிவிட்டபடியால் ஞானசம்பந்தர் கூறிய சுர எழுத்து அவ்வெழுத்துக்குரிய ஒலியெழுப்பும் யாழின் நரம்போடு ஒன்றாமல் வேறுபட்டு முரிய அந்நரம்பை இயக்கி யாழ்ப்பாணரால். ஞானசம்பந்தர் இவ்வாறு பாடியது திருநீலகண்ட யாழ்ப்பாணர் கேட்டுக் கொண்டதற்கிணங்கவே என்பதும் உணரற்பாலது (திருஞா.பு., 446). திருக்கடைக்காப்புச் சாத்தும்போது திருஞானசம்பந்தர் பாடியது யாழ்நரம்பில் அடங்கவில்லை என்றதாலும், எண்பெருகும் இசை என்றதாலும் திருக்கடைக்காப்பு சாத்துதல் என்பது கற்பனை சுரம் பாடுதல் எனும் செயற்பாடு என்றறிக.

இயலையும் இசையையும் இவ்வாறு முரிப்பது மிடற்றிசையில் சுரம்பாடும் போது மட்டும் செயக்கூடிய செயற்பாடு என்பதும், மிடற்றில் சொற்களோடு இசையைச் சேர்த்து ஒலிக்கக் கருவியில் ஒலியை மட்டும் எழுப்ப முடியும் என்பதையும் இதனால் அறிக. இதனையே மிடற்றில் அடங்கியது

யாழ்நரம்பில் அடங்கவில்லை எனச் சேக்கிழார் கூறினார்.

இது குறித்தே "இன்னிசை பாடின எல்லாம் யாழ்ப்பெரும்பாணரும் மதங்கசூளாமணியரும் பன்னிய ஏழிசைபற்றிப் பாடப் பதிகங்கள் பாடி" என (திருஞா.பு., 278:1-3) ஞானசம்பந்தர் இன்னிசையோடு பாடிய பதிகங்களைப் பெரும்பாணரும் மதங்கசூளாமணியாரும் ஏழிசை ஒலிகளின் சுருதித்தானத்தை அறிந்து நரப்புக்கருவியில் இசைத்துப் பாடினர்.

இதுவரை கூறிய விளக்கங்களின்படி திருக்கடைக்காப்பு சாத்துவது என்பது, பதிகத்தின் இறுதிப்பாடலுட்பட்ட ஏதாவது ஒரு பாடலில் உள்ள வரியினை, அல்லது அப்பாடல் பாடும்போது அவ்விடத்தில் பொருந்துமாறு கற்பனையாகச் சேர்த்த சில வரிகளை அதன் இசையும் இசைக்குறியீட்டெழுத்தும் பொருந்துமாறு இசைக்குறியீட்டெழுத்தைக்கூறி அணியும் விரிவாக்கமும் செய்து, இன்று கற்பனை சுரம்பாடுதல் எனும் செயற்பாட்டிற்கிணையான செயல் என அறியலாம்.

"அவ்வினைக் கிவ்வினை", "வரிவளர் அவிரொளி", "மைம்மரு பூங்குழல்"ணிஎனத் தொடங்கும் பதிகங்களில் முதல் பத்துப் பாடல்களிலும் ஒரே வரி மீண்டும் மீண்டும் இறுதி வரியாக உரைக்கப்படுவதும், அவ்விறுதி வரி கூறித் திருக்கடைக்காப்புச் சாத்தப்பட்டது என்று பொருள்படக் கூறியிருப்பதும், ஒவ்வொரு பாடலின் இசையமைப்பைக் (ஒவ்வொரு பாடலின் இசையமைப்பில் தோன்றும் இராக பாவத்தினை) கற்பனைச் சுரமாகத் தொகுத்து இறைவனை ஏத்திப்பாடிய அவ்வரியின் அல்லது பாடலின் இசை தாளத்தோடு பொருந்தி முடியுமாறு பாடுகின்ற கற்பனைச்சுரம் பாடுதல் எனும் முறை திருஞானசம்பந்தரால் ஏற்படுத்தப்பட்டது என்றறிகிறோம். தியாகர்ராசரின் பஞ்சரத்தினக் கீர்த்தனைப் பகுதிகள் ஒவ்வொன்றின் இசையமைப்பை (சிட்ட) சுரமாகப் பாடும் முறை திருஞானசம்பந்தர் கையாண்ட முறைக்கு இணையானது என்று கூறலாம்.

பொதுவாக இசைப்பாடல் பாடி இறுதிப் பகுதியாகிய சரணத்தில் உள்ள வரிக்குச் சுரம் பாடுதல், பாடல் பாடி கருத்துச் சிறப்பும், சொல் நயமும் மிக்கதோர் வரி அது பல்லவி, சரணம் இவற்றில் எங்கிருந்தாலும் அதற்குச் சுரம் பாடுதல், அனுபல்லவியிலும் சரணத்திலும் பல பாடல்கள் கொண்ட கீர்த்தனைகள் பாடி ஒவ்வொரு பாடலின் இசையமைப்பையும் சுரமாகப் பாடலின் முதல் வரி அல்லது இறுதிவரியில் முடித்துப் பாடுதல் ஆகிய இன்று காணப்படும் சுரம் பாடும் முறைகள் யாவும் திருஞானசம்பந்தரால் ஏற்படுத்தப்பட்டவை என உறுதியாகக் கூறலாம்.

தேவாரப் பதிகங்களனைத்தும் இசைப்பாக்களாலானவை. திருநாவுக்கரசரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் தம் பதிகங்களில் சிலவற்றிற்காவது திருக்கடைக்காப்பு சாத்தியிருக்க திருஞானசம்பந்தர் பதிகங்கள் மட்டும் திருக்கடைக்காப்பு எனக் கூறப்பட்டுள்ளன. அதேபோல திருவிசைப்பா முழுவதும் இசைப்பாக்களாயினும் சேதிராயரின் பதிகம் மட்டும் திருக்கடைக்காப்பு எனக்கூறப்பட்டுள்ளது. (திருவிசைப்பா தொகைச்செய்யுள், ஒன்பதாம் திருமுறை, பக். 200, தருமையாதீன வெளியீடு, 1969) அத்தொகைச் செய்யுளின் மூன்றாம் பாடலில் "ஐந்துடன் நால்வருமுரைத்த திருக்கடைக்காப்பிற் பண் அமைவின்" எனப்பட்டுள்ளதால் திருக்கடைக்காப்புச் சாத்தும் போது பண்ணிப்படுத்த இசைக்கூறுகள் நன்கு தோன்றும் என்பதும் இத்தன்மை ஞானசம்பந்தர் தேவாரத்திலும், சேதிராயரின் திருவிசைப்பா பதிகத்திலும் நிறைந்து தோன்றுமாதலால் இவை திருக்கடைக்காப்பு என்றே அழைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று எண்ணலாம். எனவே திருக்கடைக்காப்பு என்பது பண்ணிப்படுத்த முறை (இராகம், சுரங்கள், அச்சுரங்கள் கையாளப்படும் சுருதி நிலைகள் இவை) விளங்குமாறு சுரம் பாடுதல் என்றறிக.

காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாம் தரும்.

கருவூர்த்தேவர்

– பேரறிஞர் வ.குருநாதன்.

ஒன்பதாம் திருமுறை ஆசிரியர் ஒன்பதின்மருள் மூன்றாமவர் கருவூர்த்தேவர். திருவிசைப்பாவில் பத்துத் திருப்பதிகங்கள் பாடியுள்ள இவர் வாழ்வும் வாக்கும் குறித்து முறையே காண்போம்.

கருவூர்த்தேவர் வாழ்வு

கருவூர்தேவரின் வாழ்வுபற்றி வரலாற்று முறையில் ஏதும் அறியுமாறில்லை. இவரது இயற்பெயரும் இன்னதென்று தெரியவில்லை. கருவூர்த்தேவரென்ற பெயரினால் இவரது ஊர் கொங்குநாட்டிலுள்ள கருவூரென்பது விளங்குகிறது. இப்பெயரிலமைந்த தேவரென்னும் பட்டப்பெயர் கொண்டு இவரை அரசமரபினரென்று அறியலாம். சைவமரபில் தீக்கைபெறுகின்றபோது அந்தணர் சிவமென்றும், அரசர் தேவரென்றும் மற்றையோர் கணமென்றும் பெயரொட்டுப் பெறுவரென்பது இங்கு எண்ணத்தகும்.

இனி, இவர் அந்தணமரபினரென்றும் கருதப்படுகிறார். இவர் தாம் பாடிய பதிகங்களின் கடைக்காப்புப் பாடல்களில், 'கலைபயில் கருவூர் ஆரணம் மொழிந்த பவளவாய்' (9:9:10), 'ஆரணம் பிதற்றும் பித்தனேன்' (9:10:11), 'ஆரணம்தேன்பருகிஅருந் தமிழ்மாலை கமழவரும், காரணத்தின் நிலைபெற்ற கருவூரன்' (9:12:11), 'செழுமறை தெரியும் திகழ்கருவூரனேன்' (9:14:10) என்றெல்லாம் தம்மைக் குறிப்பிடுதலால் இவ்வாறு கருதலும் கூடும்.

அடுத்து 'அருமருந்து அருந்தி அல்லல்தீர் கருவூர்' (9:16:11) எனவரும் இவர்தம் குறிப்பினால், இவர் அரிய பச்சிலை முதலிய மருந்துகளை அருந்தி, நரைதிரை மூப்புக்களாகிய அல்லல்கள் தீர்ந்து உடல்வன்மை பெற்றிருந்தாரென்றும், பழவினை காரணமாக வந்த நோய்க்கு அருமருந்தான காயகற்பம் அருந்தி அல்லல் தீர்ந்தாரென்றும் கருதப்பெறுகிறார், இன்னும்,

துனிபடு கலவி மலைமகள் உடனாய்த்
தூங்கிருள் நடுநல்யா மத்தென்
மனனிடை அணுகி நுணுகியுள் கலந்தோன் (9:17:3)

என்றவாறு இவர் இறைவனைக் குறிப்பதையும்,

> ஒருங்கிரு கண்ணின் எண்ணில்புன் மாக்கள்
>
> உறங்கிருள் நடுநல்யா மத்தோர்
>
> கருங்கண்நின் றிமைக்கும் செழுஞ்சுடர் விளக்கம்
>
> கலந்தெனக் கலந்துணர் கருவூர் (9:17:10)

என்று தம்மைக் குறிப்பதையும் கொண்டு, இவர் உயிர்களெல்லாம் துஞ்சுகின்ற நள்ளிருள் நடுயாமத்தில் தாம் மட்டும் தனியே விழித்திருந்து யோகசாதனை செய்து இறைவனைத் தமக்குள் கண்டுணர்ந்து கலக்கப்பெற்றவராகவும் கருதப்பெறுகிறார்.

கருவூர்த்தேவருக்குக் கருவூர் ஆனிலையப்பர் கோயிலிலும், தஞ்சைப் பெருவுடையார் கோயிலிலும் உட்கோயில்கள் உள்ளன. இவற்றுள் இவரது திருவுருவச்சிலைகள் தெய்வச்சிறப்புக்களோடு எழுந்தருளுவிக்கப் பெற்று, நாட்பூசைகளும் நடைபெற்று வருகின்றன.

தஞ்சைப் பெரியகோவிலை, கி.பி.1010-ஆம் ஆண்டளவில் கட்டிய சோழப்பெருவேந்தன் முதலாம் இராசராசன் அதனுள் பெருமானை எழுந்தருளுவித்தபோது, எவ்வாறு சாத்தியும், மருந்து பெருமானை இறுகிப்பிடிக்காமல் இளகி நின்றதாக, கவலையுற்ற வேந்தன் அருகிருந்தோர் வாயிலாகக் கருவூர்த்தேவரின் ஆற்றலையறிந்து இவரை அழைக்க, இவர் வந்து மருந்தினை இறுகச்செய்து பெருமானை இருக்கையில் நிறுத்தினார் என்ற செய்தியொன்றும் வழிவழி வழங்கி வருகின்றது. இந்நிகழ்ச்சியின் பின் இராசராசன் இவரையே தன் குருவாகக் கொண்டு சிறப்பித்தானென்றும் அறிகிறோம். இதன் தொடர்ச்சியாகவே இவர் தஞ்சைப்பெருவுடையார் மீது பதிகம்பாடிப் பின்னர், இராசராசனின் மகன் முதலாம் இராசேந்திரன் எடுப்பித்த கங்கைகொண்டசோழேச்சரத்தையும் பாடினாரென்றும் எண்ணலாம். ஆகவே, அவ்விருபெரு சோழவேந்தர் காலங்களிலும் (கி.பி.985-1044) சிறப்புற்று விளங்கிய இவர் காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியும் பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதியும் என்பது விளங்கும்.

இனி, கருவூர்த்தலபுராணத்திலே காலமன்றியும் மழைபெய்வித்து ஆற்றிலே வெள்ளம் வருவித்து முதலாகப் பல அற்புதச் செயல்களுக்குரியவராக அறிய வருகின்ற கருவூர்த்தேவரையும் இவரையும் ஒருவராகக் கருதி அவருடைய

வரலாற்றுச் செய்திகளை இவர் செய்திகளாக இணைத்துக் காண்பது இசையாது. திருமாளிகைத்தேவர் வரலாற்றுச் செய்திகளை அப்பெயரே கொண்டு பிற்காலத்து விளங்கிய சித்தர் ஒருவரின் செய்திகளோடு இணைத்துக் கூறப்பட்டிருந்த இசைவின்மை கண்டு, நாம் அவ்விருவரையும் வேறுபடுத்தி உணர்வதுபோல், கருவூர்தேவரென்ற இவர் வாழ்வினையும் இப்பெயரோடே பின்வந்த சித்தரின் வாழ்வினின்றும் வேறுபடுத்தி உணரவேண்டும். காரணம், பிற்காலச் சித்தர்களின் அற்புதச் செய்திகளாக அடுக்கப்படுகின்ற பலவும் உண்மையில் நடந்தவையென்று நம்புதற்கும் மாண்புடையவையென்று மதிப்பதற்கும் ஏலாத ஏமாற்றுவித்தைகள் போலவே இருக்கின்றன. அவற்றை ஒன்பதாம் திருமுறை ஆசிரியர்களுக்கு உகந்தவைகளாக ஆய்வறிஞர் பிறரும் ஏற்க இசைந்திலர்.

கருவூர்த்தேவர் வாக்கு

கருவூர்த்தேவர் சோழ நாட்டிலுள்ள, சைவ மரபில் கோயிலென்னும் தனிச்சிறப்பிற்குரிய தில்லைத் திருச்சிற்றம்பலம், திருக்களந்தை ஆதித்தேச்சரம், திருக்கீழ்ச்கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கைகொண்ட சோழேச்சுரம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை இராசராசேச்சுரம் திருவிடைமருதூர் மற்றும் பாண்டிய நாட்டிலுள்ள திருப்பூவனம் ஆகிய பத்துத்தலங்களுக்கும் சென்று. அங்கங்கே கோயில் கொண்டுள்ள இறைவனையேத்தித் திருவிசைப்பாப் பதிகங்கள் பாடியுள்ளார். இவற்றிலே இறைவனின் அருமையோடு எளிமையும் ஆட்கொள்ளும் தலைமையும், பேரருட்பெருமையும் ஆகிய திறங்களை அழகுற எடுத்துப்பாடுகின்ற இவர், அவ்விறை வனிடத்தே தாம் கொண்ட இரக்கம் நிறைந்த ஈடுபாட்டின் பயனாய் அவன் இறங்கிவந்து தம் நெஞ்சக்கோயிலில் நிறைந்து விளங்குவதையும் நன்றியோடே நினைந்து போற்றுகின்றார்.

கைவைத்து ஆண்ட கடவுள்

கருவூர்த்தேவர் தம் தலையிலே இறைவனால் கைவைத்து ஆட்கொளப்பெற்ற அடியவரென்பதை அவரே இருபாடல்களில் எடுத்துப் பாடக் காண்கிறோம்.

கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்டசோ ழேச்சரத் தானே (9:13:8)

என்றும்,

அங்கை கொண்டு அமரர் மலர்மழை பொழிய

அடிச்சிலம்பு அலம்பவந்து ஒருநாள்

உங்கைகொண்டு அடியேன் சென்னிவைத் தென்னை

உய்யக்கொண் டருளினை (9:13:10)

என்றும் இவர் இறைவனிடமே இந்நிகழ்வினை நினைவூட்டிப் பாடுகிறார். சைவ சமயத் தீக்கைமுறையில் இதுவே, தீண்டல் தீக்கை (பரிசதீக்கை) ஆதலை அறியலாம்.

கலந்துநின்ற கடவுள்

இவ்வாறு இறைவனால் கைவைத்து ஆட்கொளப்பெற்ற கருவூர்த்தேவர், தமது உள்ளத்திலே அவ்விறைவன் கலந்துநிற்கவும் பெற்றார். பெருமைக்கும் பெருமையனாய் விளங்கும் இறைவனே சிறுமைக்கும் சிறுமையனாய் நுணுகிவந்து தம் உள்ளத்தினுள்ளே புகுந்து உணர்வுக்குள் கலந்து நிறைந்த தன்மையை,

அண்டமோர் அணுவாம் பெருமைகொண்டு அணுவோர்

அண்டமாம் சிறுமைகொண்டு அடியேன்

உண்டவூண் உனக்காம் வகையெனது உள்ளம்

உள்கலந்து எழுபரஞ்சோதி (9:13:6)

என்று உணர்ச்சி மேலிடப் பாடுகிறார் கருவூர்த்தேவர். இறைவனின் பெருமைக்குமுன் அண்டமே ஓர் அணுவாகியும் அவனது சிறுமைக்குமுன் அணுவுமே ஓர் அண்டமாகியும் தோன்ற அத்துணைப்பெரிய இறைவன் சிறியனாய் வந்து இவரது உள்ளத்தினுள்ளே புகுந்தமர்ந்து இவருண்ணும் உணவையும் தானே உவந்தேற்றுக் கொள்கின்றானாம். ஆக கருவூர்த்தேவர் தாம் உண்ணுகின்ற உணவையும் தமக்காகவன்றித் தமக்குள் கலந்துறையும் கடவுளுக்காகவென்றே அர்ப்பணித்து வாழ்ந்த அன்பின் திறமும் இங்கே அறியற்பாலதாம்.

இவ்வாறு அரியனும் பெரியனுமான இறைவன் எளியனும் சிறியனுமாய் வந்து தம் உள்புகுந்துறைந்த உதவிநிலையைக் குறித்து,

பன்னகா பரணா! பவளவாய் மணியே!

பாவியேன் ஆவியுள் புகுந்தது

என்னகா ரணம்நீ ஏழைநாய் அடியேற்கு

எளிமையோ பெருமை ஆவதுவே (9:11:3)

பாம்பணைத் துயின்றோன் அயன்முதல் தேவர்

பன்னெடுங் காலம்நிற் காண்பான்

ஏம்பலித் திருக்க என்னுள்ளம் புகுந்த

எளிமையை என்றும்நான் மறக்கேன் (9:14:2)

என்பனபோல் இன்னும் பலப்பல முறைகளில் நன்றியோடே எடுத்தியம்பி நினைவுகூர்வதை அவருடைய பாடல்கள் பலவற்றினும் *(9:11:3,5,8: 13:1,2,6,: 14:2, 16:8)* பரவலாகப் பார்க்கிறோம்.

இறைவன் இவ்வாறு தம்மை அணுக்கத் தொண்டனாக ஆட்கொண்டு எளிவந்த அருளோடே இரங்கிவந்து தமக்குள் கலந்துநின்ற கருணையை,

என்னையுன் பாத பங்கயம் பணிவித்து

என்பெலாம் உருகநீ எளிவந்து

உன்னையென் பால்வைத்து எங்கும் எஞ்ஞான்றும்

ஒழிவற நிறைந்த ஒண்சுடரே (9:11:8)

என்ற பாடலில் அவ்விறைவனை விளித்து அவனிடமே எடுத்துக்கூறும் கலுவூர்த்தேவர், தொடர்ந்து அதே பாடலில்,

முன்னையென் பாசம் முழுவதும் அகல

முகத்தலை அகத்தமர்ந்து எனக்கே

கன்னலும் பாலும் தேனும் ஆரமுதும்

கனியுமாய் இனியை ஆயினையே (9:11:8)

என்று, அவ்விறைவன் கலப்பினால் தம் பாசங்கள் அகன்ற பயனையும், தமக்கு அவன் இனிமைமிக்க அனுபவப் பொருள்களாய் இருக்கின்ற சிறப்பையும் பாடுகின்றார். இவ்வாறே நிலையாத செல்வங்களை நினைந்தோடும் பொறிபுலன்களோடு தமக்கு எப்பொழுதும் நடைபெற்றிருந்த போராட்டம் ஒழியுமாறு இறைவன் தம்முள் கலந்து தம்மை ஆட்கொண்டானென்பதையும்,

அக்கனா அனைய செல்வமே சிந்தித்து
ஐவரோடு என்னொடும் விளைந்த
இக்கலாம் முழுதும் ஒழியவந்து உள்புக்கு
என்னையாள் ஆண்ட நாயகனே (9:11:5)

என்ற பாடலடியில் எடுத்துப்பாடுகின்றார்.

இனி, தமக்குள் கலந்துநின்ற கடவுளின் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் தம் ஒவ்வோர் உறுப்பிலும் எவ்வாறு இசைந்திருந்தன என்பதை,

நெற்றியிற் கண்என் கண்ணினின்று அகலா;
நெஞ்சினில் அஞ்சிலம்பு அலைக்கும்;
பொற்றிரு வடியென் குடிமுழு தாளப்
புகுந்தன போந்தன இல்லை (9:16:2)

எனக் கூறுகின்ற கருவூர்த்தேவர், இந்நிலையில் இக்கடவுளினும் வேறோர் உறவு தமக்கு வேண்டாவென்று விடுக்கின்ற திறத்தையும் அதே பாடலில் அறிகிறோம்.

தாயினும் நல்ல முக்கணான்

இவ்வாறு இறைவனால் ஆட்கொளப் பெற்ற கருவூர்த்தேவர், அவ்விறைவனின் பேரருட்சிறப்பினைப் பெரிதும் உணர்ந்து வெளியிடுகின்றார். உலகியலில் அருளுக்கும் அன்பிற்கும் உறைவிடமாய்த் திகழ்பவள் தாய். ஆயின், அத்தாயினும் மேம்பட்ட அருளையும் அன்பையும் தருபவன் இறைவன் என்கிறார் கருவூர்த்தேவர்.

கலைகள்தம் பொருளும் அறிவுமாய் என்னைக்
கற்பினிற் பெற்றெடுத்து எனக்கே
முலைகள்தந்து அருளும் தாயினும் நல்ல
முக்கணான் (9:9:1)

என்பதை இவர்தம் அனுபவக் கூற்றாக அறியலாம். இத்தகைய பேரருட்பிழம்பாய் விளங்குகின்ற இறைவன், பிறவிக்கடலில் நீந்தும் உயிர்களுக்குப் பெருந்துணையாகும் பெற்றியை,

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற்கு என்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை என்றால்
அஞ்சலென்று அருள்செய்வான் (9:8:2)

என்பதுபோல், இன்னும் பல பாடல்களில் *(9:8:3,9)* இவர் எடுத்து மொழிகின்றார்.

இறையன்பு

இவ்வாறெல்லாம் இறைவனின் பண்புகளை ஏத்திப்பாடிய கருவூர்த்தேவர், அவ்விறைவனிடத்தே கொண்ட அன்பும் ஆர்வமும் அளவிடற்கரியன. அவற்றைப் பல பாடல்களிலும் பார்க்கலாம். இங்கே ஒரு பாடலைக் கொண்டு உணரலாம்.

தெள்ளுநீ றவன்நீறு என்னுடல் விரும்பும்;
செவியவன் அறிவுநூல் கேட்கும்;
மெள்ளவே அவன்பேர் விளம்பும் வாய்; கண்கள்
விமானமே நோக்கிவெவ் வுயிர்க்கும்.....
வள்ளலே; மணியம் பலத்துள்நின் றாடும்
மைந்தனே; என்னுமென் மனனே (9:10:4)

எனவரும் இப்பாடலில் தம் பொறிபுலன்களும் மனமும் இறைவன் சார்புகளிலேயே ஈடுபட்டுப் பதிந்திருத்தலை எடுத்தியம்புகின்றார். இதனால் இவரது இறையன்பின் ஆழம் அறியப்படும்.

ஒன்றாக நல்லது கொல்லாமை

- பேராசிரியர். கு.சி.அகமுடைநம்பி., பி.இ., எம்.ஏ.,

'அன்பின் வழியது உயிர் நிலை' என்பார் வள்ளுவர். 'புலால் உண்ணாமையால் உயிர்நிலை உள்ளது' (255) என்றும் கூறுவார்.. சிறந்த வாழ்வியல் மனிதனுக்கு அமைய வேண்டுமாயின், மனித வாழ்வில் அன்பும் அறமும் ஒருசேரக் கலந்திருக்க வேண்டும் என்று வலியுறுத்துவது வள்ளுவம். இந்தப் புவி வாழ்வியல் சூழல் உடையது, நாம் வாழும் இந்த மண்ணுலகு மட்டுமே. வேறு உலகங்களில் நீரும் காற்றும் அறவே இல்லை. ஆகவே, அங்கெல்லாம் உயிர்நிலை இல்லை. உயிர் வாழ்வும் இல்லை. வாழ்வியல் சூழலை வளமையாக் கொண்டுள்ள இந்த 'மல்லல்மா ஞாலத்தில்' வாழுகின்ற வாய்ப்பினைப் பெற்றுள்ள நம்மைப் பார்த்து.

வள்ளுவர் கூறுகிறார் :

"கேளுங்கள் மனிதர்களே! வாரி வழங்குகின்ற, வளம் சேர்க்கின்ற, இந்த வையகத்தில் வாழுகின்ற பேறு பெற்றவர்களே! உங்கள் உள்ளத்தில் அன்பை நிறைத்துக் கொள்ளுங்கள். அன்பின் பிழிவாம் அருள் வெளிப்படக் காணுங்கள். நன்னெறியில் நில்லுங்கள். அருளை ஆளுங்கள். அல்லல் உங்களை அணுகாது. நீங்கள் வாழுகின்ற இந்த மல்லல்மா ஞாலமே இதற்குச் சான்றாம் என்பதைத் தேர்ந்து கொள்ளுங்கள் (245).

"உயிர் வாழ்வுக்குக் காற்று எவ்வளவு முதன்மையானதோ அவ்வளவு இன்றியமையாதது அன்பு. அதனால்தான் "அன்பின் வழியது உயிர்நிலை" என்கிறோம். உலக வாழ்வில் அன்பு வழங்கப்படுவதால்தான் இந்த மண்ணுலகு காற்றை வழங்குவதாக அமைந்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

"அன்பு இல்லாதவர்கள், வளி வழங்கும் இவ்வியனுலகில் வாழுகின்ற வாய்ப்பைப் பெற்றிருப்பினும், அவர்களுக்கு மெய்யாக உள்ளது எலும்புகளைத் தோல் போர்த்திய - உயிரற்ற- வெற்றுடம்பே (80). அத்தகையோர் வெறும் நடைப்பிணமாய் அலைகின்றனரே? கவனித்தீர்களா?

எலும்பற்ற உடம்புடன் கூடிய புழுவை வெயில் வருத்துவதுபோல், அன்பில்லாத உயிரை அறம் வருத்தும் (77). மறந்தும் மற்றவர்க்குத் தீமை பயக்கும் எண்ணங்களை ஏற்காதீர்கள். அப்படி எண்ணுவோர்க்குத் தீமை விளைவிக்க அறம் முந்துறும். (204).

"இல்வாழ்வை வேண்டாமல் தவம் செய்து, தவச் செல்வராக விளங்கிட விரும்புகிறீர்களா? நல்லது. அப்போதும், தவம் என்பதுதான் என்ன? உங்களுக்கு வந்து சேரும் துன்பங்களைத் தாங்கிக் கொள்ளுதல், பிற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் அமைதல். அவ்வளவே தவத்தின் வடிவம் (261).

"உங்களது தவவலிமை மேலோங்கட்டும். 'யான்', 'எனது' என்கின்ற பற்றிலிருந்து முழுமையாக விடுபடுங்கள். அப்போது உலக உயிர்களெல்லாம் உங்களைத் தொழும் (208).

"அனைத்து உயிர்களும் காற்றாலேயே மூச்சு விடுகின்றன. பிறப்பெடுத்தல் என்பது எல்லா உயிர்களுக்கும் ஒரு தன்மையானதே. 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' (972). பிறப்பு-உயிர்ப்பு-இறப்பு என்ற முப்பெறும் இயக்கங்களில் எந்த உயிரும் வேறுபடுவதில்லையே. ஆகவே, எந்த உயிரிடமும், நமக்கு மாறுபாடு (பகல்) என்பது கூடாது. நாம் வேறு, பிற உயிர்கள் வேறு என்று நாம் நினைத்தால், நாம் இன்னும் பண்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். பிற உயிர்கள் நமக்கு ஒவ்வாதவை என்று நினைக்கின்ற நமது இசைவின்மையே (இகல்), அந்தப் பண்பின்மையை வளர்ப்பதாக அறிஞர் கூறுவர் (851).

"உயிர்கள் உயிர்ப்பதற்குரிய காற்று மட்டுமின்றி, நீர், நிலம், நெருப்பு, வானம் ஆகிய அனைத்துமே உலக உயிர்களுக்கெல்லாம் உரித்தானவை. இவற்றில் உன்னுடையது - என்னுடையது என்று பிரித்துப் பார்ப்பது, நம்மை நாமே சிறுமைப்படுத்திப் கொள்ளும் பேதைமையாகும். அந்த மெய்ம்மை நிலையைப் புரிந்து கொண்டு பார்க்கும்போது, 'பிற உயிர்களிடம் நட்புப் பாராட்டி உதவி புரிந்து வாழ்வதிலேயே நன்னயம் என்னும் மெய்யான பெருமித உணர்வு ஏற்படும் (860) என்பதைக் கண்டு கொள்ளுங்கள்".

நாம் வாழுகின்ற இந்த இருபதாம் நூற்றாண்டில் உலகம் வியக்க வாழ்ந்து சென்ற மெய்ப்பொருளறிஞர் ஜே.கிருஷ்ணமூர்த்தி (ஜே.கே), நன்னயம் (Goodness) குறித்து வழங்கியுள்ள பொருளுரையை இவண் கருதிப் பார்ப்பது, வள்ளுவம் வழங்கியுள்ள 'கொல்லாமை' அறம் பற்றியும் 'பொய்யாமை' அறம் பற்றியும் மேலும் தெளிவு பெறுவதற்குப் பேருதவியாய் அமையும்.

ஜே.கே. கூறுகிறார் :

"புடவி என்பது நம்மிலிருந்து வேறுபட்டதன்று. நம்மையும் சேர்த்த இந்தப் புடவியின் இயக்கம் - நட்சத்திரங்கள், வானுலகங்கள், சூரியன், சந்திரன் போன்ற அனைத்தையும் உள்ளடக்கிய இந்தப் புடவியின் இயக்கம்- ஒட்டுமொத்த வாழ்வியக்கமாக இயங்கி வருகிறது. இந்த இயக்க ஆற்றல் அளவிடற்கரியது. இந்த மாபெரும் ஆற்றலுடன் ஒப்பிடும்போது, நம்முடைய தனிப்பட்ட ஆற்றல் என்பது ஒரு புள்ளியளவு கூட இல்லை. நம்முடைய இந்தக் குறுகிய எல்லையை அகற்றிவிட்டு, அந்த வாழ்வியக்கப் பேராற்றலுடன் இணைந்து விட நம்மால் இயலுமா?

"நான் அறிவாளி என்று நினைக்கிறேன், என்னால் அதைச் சாதிக்க முடியும், இதைச் செய்திட இயலும் என்றெல்லாம் நினைத்துக் கொள்கிறேன். இத்தகு நினைவுகளையெல்லாம் ஒதுக்கிவிட்டு, அளவிறந்த (வாழ்வியக்க) ஆற்றலின் ஒரு பகுதியாக நாம் ஆகிவிட முடியாதா? இதையே நயன்மை (Goodsness) என்கிறோம்.

"நமது குறுகிய பலகணி அகற்றப்பட வேண்டும். நமக்குப் பலகணி இல்லை என்றாகட்டும். இந்த நிலையில் வாழ்க்கை என்பது என்ன? மாபெரும் அறிவுப் புலன் (Immense Intelligence) எனப்படும் அந்த அளவிறந்த ஆற்றல் - அனைத்துக்கும் மேலான (Supreme), வயப்பாடு எதுவுமற்ற (Unconditioned) அந்த ஆற்றல்தான் வாழ்வா? ஆம், இது தொடக்கமும் முடிவும் இல்லாதது. இந்த வாழ்வின் முழுமையில் (Wholeness of life) நாம் கலந்து விடுவோமாக. இதுதான் வாழ்க்கை. இதுதான் நயன்மை."

ஜே.கே.யின் இந்த அறிவுப் புலப் பின்னணியிலேதான், 'அன்பின் வழியது உயிர்நிலை' என்றும், 'பகுத்துண்டு பல்லுயிர்

ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுளெல்லாம் தலை' என்றும், 'மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப தன்னுயிர் அஞ்சும் வினை' என்றும், 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி, எல்லா உயிரும் தொழும்' என்றும் அறிவுப் புனல் பாய்ச்சுகின்ற வள்ளுவத்தை நம்மால் தெளிவுறுப் புரிந்து கொள்ள இயலும்.

பொய்யாமை :

மனம் அல்லது உள்ளம் தன்னறிவு (Conciousness) என்பதெல்லாம் அனைத்து உயிர்களின் ஒட்டுமொத்த இயக்கத்தின் வழிப்பட்டதே என்பது உளவியலறிஞர்களின் முடிவு. ஆகவே, ஒருவன் உள்ளத்தால் பொய்யாது ஒழுகின், உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன் *(972)* என்ற மெய்ம்மை நிலை நமக்குத் தெளிவாகிறது. உள்ளத்தால் பொய்யனாய், கள்வனாய் உள்ளவன் மற்றவர் உள்ளங்களுடன் உறவாட மாட்டாமல், தன்னைத்தானே சிறைப்படுத்திக் கொள்கிறான்.

புத்தர், வள்ளுவர், ஜே.கே. போன்ற சான்றோர்கள், தத்தம் உள்ளத்தை உலகத்தார் உள்ளத்துடன் உறவாடக் கண்டவர்கள். மற்றவர் உள்ளங்களைக் கண்டறிய எந்த ஒரு விளக்கும் அவர்களுக்குத் தேவைப்பட்டதில்லை. 'புற இருளை அகற்றுகின்ற விளக்குகளெல்லாம் சான்றோர்க்கு விளக்காகப்படுவதில்லை. பொய்யா விளக்கே அவர்களுக்குரிய விளக்காம் *(299)*. இந்த விளக்கு அவர்களிடம் நீக்கமற இருப்பதால்தான் சான்றோர்கள் உலகத்தார் உள்ளத்திலெல்லாம் இருக்கை கொண்டுள்ளார்கள்.

இவ்வாறு வாய்மையின் சிறப்பைப் பலபடப் பாராட்டுகிறார் வள்ளுவர்; தலைசிறந்த அறம் என்றும் கூறுகிறார். 'தவம், தானம் செய்வோரைவிட மனமார வாய்மை போற்றி வாழ்பவர் தலைசிறந்தவராவார்' *(295)* என்றும், மெய்யாக யாம் கண்ட நயன்மைகள் பலவற்றுள்ளும் வாய்மையைவிடச் சிறந்தது என்று சொல்லத் தக்கது வேறு எதுவும் இல்லை என்றும் கூறி, வாய்மைக்கு மிகவும் உயர்ந்த சிறப்பை வள்ளுவர் வழங்குகின்றார்.

வாய்மை இத்துணைச் சிறப்புக்கு உரியது என்றாலும், வாழ்வின் முழுமையுடன் இசைந்தே அஃது இயங்க வேண்டியுள்ளது. 'வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும் தீமை இலாத சொலல்' *(291)* என்று அதன் நிலைப்பாட்டை வரையறுக்கிறார் வள்ளுவர். குற்றம் தீர்ந்த நன்மையைப் பிறர்க்குத் தருவதாக அமையும் என்றால் பொய்யையும் கூட வாய்மைக்குரிய இடத்தில் வைத்துப் போற்றத்தக்கதே *(292)* என்றும் கூறுவார்.

ஒன்றாக நல்லது கொல்லாமை :

புடவியின் மொத்த வாழ்வியக்கத்தைப் பொருத்தவரை, வாய்மைக்குத் தனி ஆளுமை கிடையாது. இன்னா செய்யாமையை நிலைப்படுத்துவதாகவே வாய்மை அமைய வேண்டும். 'புரை தீர்ந்த நன்மை பயத்தல்' என்ற அடித்தளத்திலேயே வாய்மை வழங்கப் பெறல் வேண்டும். வாழ்வில் முழுமைக்கும் இன்றியமையாத முதல் தேவை கொல்லாமை. வாழ்வியல் சூழலை (Eco - System) வளப்படுத்துவது உயிர் இரக்கம் (அகிம்சை).

வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்குத் தேவையானது பொய்யாமை. ஆயின், உயிர் இருந்தால்தானே வாழ்க்கை, நெறி - எல்லாம்? "கொல்லாமை" ஆறத்தின் பராமரிப்பிலேயே உயிர் வாழ்க்கை அமைய வேண்டியுள்ளது. ஆகவே உயிர் வாழ்வை உறுதிப்படுத்திடத் தேவையான ஒன்று கொல்லாமை. வாழ்வியக்க முழுமைக்கு, 'ஒன்றாக நல்லது கொல்லாமை'.

மற்று அதன்பின்சாரப் பொய்யாமை நன்று :

கொல்லாமை அறம் மெய்யாகவே இவ்வுலகில் வல்லமையுடன் வழங்க வேண்டுமென்றால், ஒவ்வொரு மனிதனிடமும் பொய்யாமை அறம் வீற்றிருக்க வேண்டும். ஒருவன் உள்ளத்தால் பொய்யாது ஒழுகின், உலகத்தார் உள்ளத்துளெல்லாம் அமைவிடம் காண்பான்; பிறர் உள்ளத்துடன் உள்ளுணர்வோடு உறவாடி மகிழ்பவன், அந்த உயிர்களை எப்படிக் கொல்ல முனைவான்? ஆனால், பொய்த்துயிர் வாழும் எந்த ஒரு மனிதனும், அல்லது எந்த ஒரு விலங்கும் மற்ற உயிர்களிடம் உயிர் இரக்கம் - அருளாட்சி - கொள்வது அரிது.

கள்ளங்கபடமில்லாத மான், பசு போன்ற வாய்மை வழி வாழும் விலங்குகள், எந்த உயிரையும் கொல்வதில்லை. ஆனால் இருளடர்ந்த காடுகளில் பதுங்கிப் பதுங்கி வாழுகின்ற புலி, சிங்கம், நரி போன்ற பொய்யாமை போற்றும் காட்டு விலங்குகள் பிற உயிர்களைக் கொன்றே வாழ வேண்டியுள்ளது.

மனிதர்களுள்ளும், புலி, சிங்கம் போன்ற கொலைஞர்கள் அங்கொருவர் இங்கொருவராக இருப்பதைக் காண்கிறோம். அவர்கள் வெளிப்படையாக எதையும் பேசமாட்டார்கள். குள்ளநரி மனம் படைத்தவர்கள் அவர்கள். உள்ளொன்று வைத்துப் புறம்வேறு பேசுவது அவர்களுக்கு இயல்பாகிவிடும். அவர்களிடம் பொய்யாமை அறத்தைக் காண முடியுமா? ஆனால்

உயிர் இரக்கம் கொண்டுள்ள அருள் நெஞ்சினரிடம் பொய்ம்மையைக் காண முடியாது. அண்ணல் காந்தியடிகள் உயிர் இரக்கக் (அகிம்சை) கோட்பாட்டைத் தம் உயிரினும் மேலாகப் போற்றியவர்; பொய்யாமையின் வேள்வியாகவே தம் வாழ்க்கையைக் கண்டவர். ஆகவே, கொல்லாமை அறத்துக்குப் பின்புலமாக அமைவது பொய்யாமை அறம். கொல்லாமையைப் பின்சாரப் பொய்யாமை நன்று.

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன் பின்சாரப் பொய்யாமை நன்று:

வாழ்வியல் முழுமைக்கும் நல்லது என்று ஒன்றைக் கூறுவதெனில், அது கொல்லாமை. கொல்லாமைக்கு ப்பின்புலமாக, அதற்குச் சார்பாய் அமையும் பொய்யாமை நயன்மை (Goodness) வாய்ந்தது. இங்கே பொய்யாமை அறத்தை வள்ளுவர் பின்தள்ளிவிட்டார் என்று கருதலாகாது. உலக வாழ்வின் முழுமையைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலும், கொல்லாமை அறத்தையே எல்லாமுமாகப் போற்றுதலும் இன்றியமையாத் தேவையாகும். இந்த அறம் நீக்கமற நிலைபெற வேண்டுமாயின், இதற்குப் பின்னணியாக, இதனைச் சூழ்ந்து நிற்க வேண்டிய அறம், பொய்யாமையாகும். இந்த உட்கருத்தை, உள்ளது உள்ளவாறு புரிந்து கொண்டால், முதல் இடம், அடுத்த இடம் என்ற குழப்பம் ஏற்படாது.

மனித வாழ்வின் ஆளுமைக்கு ஆண்மை, ஒன்றாக நல்லது. பெண்மை, அதற்குத் துணையாக, அதனைச் சார்ந்து நிற்பது. இவ்வாறு கூறும்போது, இங்கே ஆண்மையே முதலிடம் பெறுகிறது. பெண்மைக்கு இரண்டாம் இடம்தான் என்று கொள்வது பேதமை. இதேபோல், அக வாழ்வுக்கு ஒன்றாக நல்லது பெண்மை. அதற்கு உற்ற துணையாக அமைவது ஆண்மை. ஒன்றில்லையேல் மற்றதற்குச் சீரும் இல்லை, சிறப்பும் இல்லை; புகலும் இல்லை, போக்கும் இல்லை.

தமிழிலக்கியத்தில் திருவாசகம்

– பேரறிஞர். தி.நா.பிரணதார்த்திஹரன்

தமிழிலக்கியத்தில் மாணிக்கவாசகர் சிறப்பான இடத்தைப் பெறுகிறார். இரண்டாம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டு வரை என அவர்காலம் குறித்துக் கருத்துக்கள் பல உள்ளன. இருப்பினும் அவர் ஒன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்தவர் என்பது அறிஞர்களின் துணிபு. திருவாதவூரில் பிறந்து, மதுரையில் வாழ்ந்து, தில்லையில் இறைவனோடு இரண்டறக் கலந்த அவர் பன்னிரண்டாம் நூற்றாண்டிலிருந்து வழிபாட்டுக்குரியவர் ஆகிவிட்டார்.

வாசகர் காலம் ஒன்பதாம் நூற்றாண்டு என்று கருதப் பின்வரும் கருத்துக்கள் துணைசெய்கின்றன. 1. சுந்தரர் பாடியதிருத்தொண்டத்தொகையில் அவர் குறிக்கப்படவில்லை. 2. திருக்கோவையாரில் குறிக்கப்பெறும் வரகுணன் இரண்டாம் வரகுணனே (கி.பி.862.-880) என்பது அறிஞர் கருத்து. 3. சிங்கள மன்னன் முதலாம் சேனன் (கி.பி.833-853) மகள் ஊமையாக இருந்தவள் மணிவாசகரால் பேசும் திறன் பெற்றாள் அதுபற்றிய குறிப்பு நிகாய சங்க்ரஹயம் என்ற சிங்களநூலில் காணப்படுகிறது. திருவாசகத்தில் திருச்சாழல் பகுதி அந்த நிகழ்ச்சியோடு தொடர்புடைய்து என்று கூறுவர். 4. திருவாசகத்தில் பயின்று வரும் 'மாயாவாதம்' என்ற சொல்லாட்சி அவர் ஆதிசங்கரருக்குப் பின்னர் இருந்திருக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

பௌத்தம் பற்றியகுறிப்பு மட்டுமே திருவாசகத்தில் உண்டு; சமணர்களை பற்றி ஏதும் இல்லை. மணிவாசகர் கால அரசியல் செய்தியும் ஏதும் இடம்பெறவில்லை. நரியைப் பரியாக்கிய செய்தி நூலில் மிகுதியாகக் குறிக்கப்பட்ட போதிலும், அந்நிகழ்ச்சி அவர் வாழ்க்கையில் நடந்த ஒன்றாகக் கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில் நரியைப் பரியாக்கிய செய்தி நூலில் பேசப்படுகிறதே தவிர, பரிகள் மீண்டும் நரியானது எங்குமே குறிக்கப்பெறவில்லை. ஆகவே அதனைச் சீவன் சிவமாதலுக்குரிய குறியீடாக வாசகர் பயன்படுத்துகிறார் என்று கொள்ளுதல் பொருந்தும்.

வினை, பிறப்பு என்ற இரண்டும் வாசகரைப் பெரிதும் பாதிக்கின்றன. வினை என்பது செயல், அதன் பயன் ஆகிய

இரண்டையுமே குறிக்கும். அதற்கு இணையான கர்மம் என்ற சொல் வினை என்ற பொருளில் நூலில் ஒருமுறைக்கூடப் பயன்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சிவனது ஆணையால் வினை தொழில்படுகிறது என்பதும் திருவாசகத்தில் காணக்கிடைக்கவில்லை. வினையின் காரணமாக உண்டாவது பிறப்பு. 'வினைப்பிறவி' (1:87 31:2) என்ற சொல்லாட்சி இதனை உணர்த்துகிறது. பிறவி, 'அல்லல்', 'வேதனை', 'பிணி', 'காடு' 'பொச்சை' என்றெல்லாம் உருவகப்படுத்தப்படுகிறது. சிவன் வாசகரது பிறவி வேரை அறுத்தான் (24:2,3: 37:16). பிறவியின் வேர் வினை; அது அறுபட்டதால் பிறவி, மறுபிறவி ஆகிய இரண்டுமே அவருக்கு இல்லாது போயின. இங்கு பிறவி என்பது பிறப்பு, இறப்பு ஆகிய இரண்டையும் குறிக்கும். மேலும் பிறவிக்கடல் கடக்க ஐந்தெழுத்தாம் புணை அவருக்குத் துணை செய்கிறது.

வினை, பிறவி என்ற இரண்டையும் போல அவரைப் பெரிதும் பாதித்தவை பாசம், மலம் ஆகிய இரண்டும். பாசம் என்பது நூலில் 11 இடங்களிலும், மலம் என்பது 16 இடங்களிலும் எடுத்தாளப்படுகின்றன. பாசம் என்பது மனிதத் தளையைக் (பசுபாசம்) குறிக்கிறது. ஆறுமுறை அச்சொல் 'அறு'. என்ற வினையோடு சேர்ந்து வருகிறது. வாசகரது பாசம், மலம், வினை, பிறப்பு ஆகியவற்றைச் சிவன் அறுத்தான். சிவனுக்கும் பாசத்திற்கும் இடையே மனித ஆன்மாவை நிலைக்களமாகக் கொண்டு நடைபெறும் போராட்டத்தை வாசகர் அருமையாகப் படம்பிடித்துக் காட்டுகிறார். மலம் என்ற சொல் தத்துவப் பொருளிலும் உலகியல் பொருளிலும் வழங்கப்படுகிறது, மும்மைமலம் (48:2) 'மலங்கள் ஐந்து' (6.29) என்ற வகைப்பாட்டையும் அவர் காட்டத் தவறவில்லை. (மலங்கள் ஐந்து என்ற கருத்து 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்த பிங்கலந்தை நிகண்டிலும் காணப்படுகிறது. ஆகவே அக்கோட்பாடு அந்த நூற்றாண்டில் உருவாகியிருக்கலாம்,

'அறுத்தல்', 'ஆட்கொள்ளுதல்', 'அருளுதல்' என்ற மூன்று செயல்கள் திருவாசகத்தில் மிக முக்கயமானவை; திருவாசகத்தில் பிழிவாக அவை விளங்குகின்றன. மணிவாசகர் - சிவன் உறவை அந்த மூன்று சொற்களில் அடக்கிவிடலாம்.

'அறுத்தல்' என்பது உலகியல் தொடர்புகளிலிருந்து அவர் பெற்ற விடுதலையைக் குறிக்கிறது. சிவனருளால் விளைந்தது அச்சொல். உறவுமுறை, சாதி ஆகிய தொடர்புகளிலிருந்தும்

வாசகர் விடுதலை பெற்றார். சாதிவழிப்பட்ட சமுதாயத்தை அவர் ஏற்கவில்லை; இருப்பினும் அவர் ஒரு சமுதாய சீர்த்திருத்தவாதி அல்லர். சமுதாய மாற்றத்திற்கான கருத்து எதனையும் அவர் கூறவில்லை. அவரைப் பொறுத்தவரைச் சிவனோடு கொள்ளும் உறவே நித்தியமானது. பக்தர் சிவனோடு கொள்ளும் உறவு, பத்தரோடு பத்தர் கொள்ளும் உறவு ஆகிய இரண்டு உறவுகளை மட்டுமே அவர் ஏற்கிறார். ஆன்மீக விடுதலை மட்டுமின்றிச் சமுதாய விடுதலையும் நூலில் இடம் பெறுகிறது. இறைவன் அருளால் மட்டுமே அது சாத்தியமாகும் என்பது அவர் துணிபு. சுற்றம், சாதி, குலம் ஆகிய தொடர்புகளைச் சிவன் அறுத்தான் என்று பேசிய போதிலும், சிவனை அந்தணன், வேதியன் என்று சிறப்பித்துக் கூறுகிறார். அதற்குக் காரணம் சிவன் அவரை ஆட்கொண்ட கோலமாக அது விளங்குவதால் போலும். உலகத் தொடர்பிலிருந்து அவரை நீக்கிய இறைவன் அடியார் குழாத்தோடு சேர்த்துவிட்டான். 'அத்தன் ஆண்டு அடியாரோடு கூட்டிய அதிசயம்' என்று நூலில் இது குறிக்கப் பெறுகிறது. மனிதப் பிரச்சனை நீங்க இறையருள் பெற்று பக்தி நெறியில் சென்று, அடியார் கூட்டத்தில் ஒன்றாகி நிற்பது ஒன்றே வழி என்பது திருவாசகத்துணிபு.

திருவாசகத்தில் எல்லாக் கருத்துக்களுமே ஒரு பொதுவான மையத்தை நோக்கிக் குவிந்து செல்கின்றன. சிவனது கலப்பால் மணிவாசகர் பெற்ற அனுபவமே அந்த மையம். அந்த அனுபவத்தால் விடுதலை (முக்தி) பெற்றார் அவர். பாசத்திற்குட்பட்ட பழைய வாழ்விலிருந்து விடுதலை, புதுவாழ்வின் மலர்ச்சி என்ற இரு கூறுகளைக் கொண்டது அந்த விடுதலை. 'சித்தமலம் அறுத்தல்', 'சிவமாக்குதல்' என்று முறையே அவற்றைக் குறிப்பிடுவர் வாசகர். முன்னது முக்தியின் எதிர்மறைப் பண்பு; பின்னது அதன் நேரிடைப் பண்பு. ஒரே செயலில் இரு பக்கங்கள் அவை. சிவனருளால் விளைந்தது அச்செயல்.

சிவனது அருட்செயல்களையெல்லாம் புராணமொழியின் வாயிலாக வெளிப்படுத்துகிறார் வாசகர். அவை குறியீடுகளாகவே நூலில் வெளிப்படுகின்றன. அவை எல்லாமே சிவன் அவருக்குச் செய்த 'அருளுதல், ஆட்கொள்ளுதல், அறுத்தல்' என்பனவற்றிற்கு விளக்கமாகவே அமைகின்றன, புராணச் செய்திகள் முழுதும்

கூறப்பெறாமல் வாசகர் அனுபவத்திற்கு இயைபுடைய பகுதிகள் மட்டும் பொருத்தமுறக் காட்டப்படுவது குறிப்பிடத்தக்கது. சிவனது செயல்கள் எல்லாமே அருட்செயல்கள் என்ற சைவ மரபு திருவாசத்திலும் காணப்படுகிறது.

சிவன் முப்புரம் எரித்தது (22முறை), ஆலால விடம் அருந்தியது (21 முறை) கங்கையை அடக்கியது (12 முறை) ஆகியவை நூலில் அதிகமாகப் பயின்று வரும் புராணச்செய்திகள். அடிமுடி தேடிய கதை (44 முறை) சிவனது உயர்வற உயர்நலம் உடைய தன்மையை விளக்குகிறது. சிவன் உலகினைத் துன்பத்திலி ருந்து மீட்கவே இவ்வாறு செய்தான் என்ற செய்தியைப் புராணச் செய்திகள் உணர்த்தி நிற்கின்றன. புராண மொழியால் சிவன் உயிர்களுக்கு விடுதலை தருகிறான் என்று விளக்கிய வாசகர் அவன் பெருமையைத் தத்துவமொழியாலும், தலபுராணச் செய்திகளாலும் மேலும் வெளிப்படுத்துகிறார். இறைவனே திருப்பெருந்துறையில் தமக்கு மனிதவடிவில் குருவாக வந்தான் என்று அவர் கூறுவது தமிழ்நாட்டுச் சித்தர் மரபைச் சேர்ந்த ஒன்று. இறைவன் பெருமையையும் தனது சிறுமையையும் ஒருசேரப் பலவிடங்களில் கூறுவது அவர் மாறுபாட்டுக் கோட்பாட்டை (principle of contrast) விளக்குவதாக அமைகிறது. தம் குறையைக் கூறுமிடத்து இறைவனை முன்னிலையிலும், இறைக்கலப்பால் விளைந்த அனுபவத்தைக் கூறுமிடத்து இறைவனைப் படர்க்கையிலும் கூறுவது வாசகர் வழக்கம். அவரது சிவன் உருவமும் அருவமும் கலந்த பொருளாக விளங்குகிறான்.

சிவன், பாண்டியன் என்று குறிக்கப்படுவது, வெள்ளையானை சாபம் தீர்த்தது, ஆகமங்களை மீட்டது, மதுரையில் வளையல் விற்றது, நரியைப் பரியாக்கியது ஆகியவை திருவாசகத்தில் பயின்றுவரும் திருவிளையாடல் புராணச் செய்திகள். அவை யாவும் சிவனது லீலைகளாகக் (விளையாட்டு) கூறப்படுகின்றன. புராணம், ஆகமம், வேதம் என்ற மூன்றையும் ஏற்கும் அவர்தம் சமயமும் இந்த மூன்றையும் தழுவி நிற்பதாம். கூத்தப்பெருமான் திருக்கோலம், மாதொருபாகன் திருக்கோலம் என்ற இருகோலங்களே திருவாசகம் பெரிதும் போற்றும் சிவனது வடிவங்கள்.

தாயினும் இனிய சிவனை நோக்கி வாசகர் அன்போடு உருகுகின்றார். 'உருகுதல்' என்பது மனம் ஒரு நிலையிலிருந்து

இன்னொரு நிலைக்கு மாறுவதைக் குறிக்கும். பக்குவம் பெற்று முழுமை பெறுதலை அச்சொல் உணர்த்துகிறது. இறைத் தொடர்பால் நிகழ்வது அச்செயல். அவர்தம் உள்ளம், உடல், எலும்பு எல்லாமே உருகுகின்றன. பத்தியின் உயர்ந்த நிலை வெளிப்பாடு அது.

பத்தியை அன்பு என்றே அழைக்கிறார் வாசகர். அது 'எண்ணமிலா அன்பு'. சிவன் 'அன்பன்', பத்தர்கள் 'அன்பர்கள்'. பத்தி வழிப்பட்ட அவர்தம் தொண்டு சிவனது திருவடிக்கே செய்யப்படுகிறது. சிவனைவிடச் சிவனது திருவடியே நூலில் பெரிதும் போற்றப்படுகிறது. வழிபாட்டோடு தொடர்புடைய பூக்கொய்தல், பொற்சுண்ணம் இடித்தல், பள்ளியெழுச்சி பாடுதல் போன்றவையும் பாராட்டப்படுகின்றன. பூசனை போற்றப் படுகிறது: சண்டேசரும், கண்ணப்பரும் சிறப்பிக்கப்படுகின்றனர். பத்தியால் விடுதலை பெறுதலே திருவாசகம் எடுத்துரைக்கும் நெறி ஆகும். இருப்பினும் வாசகரது ஆன்மீக அனுபவம் யோகநெறிப்பட்டு விளங்குகிறது. நாயக, நாயகி பாவம், ஆண்டான் - அடிமைத்திறம் ஆகிய இருபாவங்களும் அவரது பத்தியில் மேலிட்டு நிற்கின்றன. சிவனை இறைவனாகக் காணும்போது அடிமைத்திறமும் அவரிடத்து விளங்கித் தோன்றுகின்றன.

தனி மனிதனாக இருந்த அவர் இறை அனுவத்தால் உலகப்பொதுமனிதனாக மாறினார். அவர் ஒருமுழுமையான அருளாளர் (complete mystic). திருவாசகத்தில் இதனைக் காணமுடிகிறது. மனிதனுடைய அடிப்படைப் பிரச்சினைகளை அருளியல்வழியில் தீர்த்து வைக்கிறது அந்தத் தெய்வநூல். மனிதனுக்கு அப்பாற்பட்டது. மனிதனுக்கு அகப்படுவதை அங்குக் காணமுடிகிறது. பிற்காலத்தமிழ் அருளாளர்களுக்கு வழிகாட்டியாக விளங்குகின்றதோடு மட்டுமல்லாமல், மொழிக்கு அப்பாற்பட்ட ஒன்றை மொழியால் விளக்கலாம் என்பதற்குச் சான்று பகர்கின்றது திருவாசகம். 'ஊன்கெட்டு உணர்வுகெட்டு உள்ளமும் போய் நான் கெட்டு நிற்பதே' நூலின் சமயப்பொரு ண்மை. மனித வாழ்வில் உயர்நிலை மாற்றம் பெற இறையுணர்வு அவசியம் என்பது நூலின் அடிப்படை. தத்துவப் பொருண்மையும் அனுபவ உணர்வால் பெருமை பெறுகிறது என்பதை நூலைப் படிக்கும்போது நாம் உணர முடிகிறது. இறைவன் பத்தனை

ஆட்கொள்ளுதல், பத்தன் ஆட்கொண்டவனிடம் பத்தி செலுத்துதல் என்பதை மரபாக்கியது திருவாசகம். வேத சமயமும், தமிழ்ச்சமயத்தோடு கலந்தாலும் தமிழ்ச்சமயம் தனது தனித்தன்மையை இழக்கவில்லை என்பதற்குத் திருவாசகம் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

சங்க இலக்கியம் கூடச் சிறிது காலம் தமிழ் வழக்கில் நிலை பெறாது மறைந்து இருந்தது; ஆனால், திருவாசகம் தொடர்ந்து வழக்கில் இருக்கிறது. அது ஒன்றே அதன் பெருமையைப் பறை சாற்றும். அறிவு வழியைவிட உணர்வுவழியே சிறந்தது என்று அவ்வழியில் நம்மை ஆற்றுப்படுத்துகிறார் மணிவாசகர்.

'செந்தமிழ்' இதழின் வளர்ச்சிக்கு ரூ. *1000/-* செலுத்துவோர் **செந்தமிழ்ப் புரவலர்** என்னும் சிறப்புக்குரியோராவர் திருவண்ணாமலை ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார் அவர்கள் ரூ. *1000/-* வழங்கி, முதற் புரவலராக விளங்குகிறார்கள் என்பதனை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மிகக் குறைந்த செலவில் அறிமுகப்படுத்தும்

மீனாட்சி ஹெல்த் கேர் திட்டம்

மிகக் குறைந்த செலவில் அனைத்து உடல் பரிசோதனையும் செய்து கொள்ள அறிய வாய்ப்பு

திட்டத்தின் சிறப்பு பரிசோதனைகள்

1. தலை முதல் கால் வரை பரிசோதனை
2. விரிவான முறையில் கண் பரிசோதனை
3. பல் பரிசோதனை
4. இரத்தப் பரிசோதனை
5. சிறுநீர் பரிசோதனை
6. ஸ்கேன்
7. நெஞ்சு எக்ஸ்ரே
8. ஈ.சி.ஜி.

❑ இரத்தவகை ❑ சீரம் கிரியேட்டினைன்
❑ சர்க்கரை அளவு ❑ கொலஸ்ட்ரால் அளவு

கூடுதல் பலன்கள்

- இலவசமாக இரத்த அழுத்தம் பார்த்தல்
- இலவசமாக இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு.
- இலவசமாக இரண்டுமுறை தலை சிறந்த நிபுணர்களால் ஆலோசனை (ஒரு வருடத்திற்கு)

இத்தனையும் ரூ. 400/- செலவிலேயே

பெண்களுக்கு : பெண் மருத்துவரின் சிறப்பு ஆலோசனை மற்றும் புற்று நோய் சம்பந்தமான ஆலோசனைகள் வேண்டுமெனில் கூடுதல் ரூ. 50/- செலுத்த வேண்டும்.

தொடர்புக்கு :

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்

MMHRC

Only Private Hospital in South TamilNadu Approved by State Govt. for Govt. Employees (G.O.Ms. No. 490/19/6/95)

லேக்ஏரியா, மேலூர் ரோடு, மதுரை - 625 107.

Ph : 42481 (5 lines) 535977 (3 lines)

உயர்ந்த மருத்துவம் குறைந்த செலவில்

✓ பாண்டியன் கணினி மறுதோன்றி அச்சகம், மதுரை-1. © 31927